# அப்பாக்களும் அம்மாக்களும்

(சிறுகதைத் தொகுப்பு)



மு. தயாளன்

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாக்களும் அம்மாக்களும்

(சிறுகதைத் தொகுதி)

## மு. தயாளன்

மகுடம்

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 26**

ISBN : 978 - 955 - 4041 - 22 - 6

• நூல் - அப்பாக்களும் அம்மாக்களும் (சிறுகதைத்தொகுதி) • ஆசிரியர் - மு. தயாளன் • உரிமை - மு. தயாளன் • முதல் பதிப்பு ஒக்டோபர் - 2020 • பக்கம்-120 • வெளியீடு - மகுடம், இல.90, பார்வீதி, மட்டக்களப்பு 30000, இலங்கை. • தொ.பே. இல. 0774338878 • வடிவமைப்பு - மு. தயாளன் • அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு. • விலை - 300/=

• Book - Appakkalum ammakkalum (Short stories) • Author-M. Thayalan • © Author • First Edition October- 2020 • Size - 1/8 • Pages-120 • Published by - Magudam Publication 90, Bar Road, Batticaloa. • Ph.No. 0774338878 • email - magudammichael@gmail.com • Printing - Wanasinghe Printers, Batticaloa • Price - 300/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.........


| | |
|---|---|
| பதிப்புரை | 4 |
| உங்களோடு நான் ... | 5 |
| சமூக அக்கறையுள்ள எழுத்து.... | 6 |
| அம்மாக்களும் அப்பாக்களும் | 9 |
| கடவுளைக் காணோம் | 19 |
| என்ரை இவரின்ரை கதை | 27 |
| ஒரு சாமானியனின் அழுகை | 34 |
| நான்கு கடிதங்களும் நண்பனும் | 42 |
| வரட்டுக் கௌரவம் | 54 |
| ஒரு காதலின் முடிவு | 64 |
| ஒரு நாள் ஒரு மனிதன் ஒரு குடும்பம் | 95 |
| அர்ப்பணம் | 105 |
| ஆட்சி அதிகாரம் கை மாறுகிறது | 111 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் வெளியீட்டகத்தின் 26வது வெளியீடாக பிரபல எழுத்தாளர் கரவை மு.தயாளனின் "அப்பாக்களும் அம்மாக்களும்" என்ற இச்சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

மகுடம் பதிப்பகம் வெளியிடும் கரவை மு.தயாளனின் ஐந்தாவது நூலும் அவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பும் இதுவாகும். கடந்த 2018ல் அவரது புளியமரம் (சிறுகதைத் தொகுப்பு) தயாளனின் குறும்பாக்கள் (குறும்பா) வெளிவந்தது. 2019ல் மடிவேன் என்று நினைத்தாயா (கவிதைகள்), ஒரு லண்டன் பொடியன் (சிறுகதைத் தொகுப்பு) வெளிவந்தது. இந்த ஆண்டு அப்பாக்களும் அம்மாக்களும் சிறுகதைத் தொகுப்பு வெளிவருகிறது. அடுத்ததாக அவரது "வருவரா மாதொரு பாகன்?' என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பு வெளிவரவுள்ளது.

மு.தயாளன் அவர்கள் அண்மைக்காலமாக கலை இலக்கியத்தில் மிகத் தீவிரமாக இயங்கி வருபவர். வருடத்திற்கு இரண்டு நூல்கள் என்ற ரீதியில் வெளியிட்டு வருபவர். அவரது படைப்புக்களின் தோற்றுவாய் சமூக சிந்தனைகளே.

சமூகத்தில் இருந்து பெற்றதை மீள சமூகத்திற்கே திருப்பிக் தொடுப்பது அவரது பணி. தனது அனுபவங்களின் ஊடாக அவர் சமூகத்தைப் பார்க்கிறார். அதனுடன் பேசுகிறார். அவரது ஒவ்வொரு கதைகளும், அன்றாடம் நாம் சமூகத்தில் காணும் பாத்திரங்களே.

அவர் அழகியல் தொடர்பாக அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. போகிற போக்கில் ஒரு செய்தியை ஆழமாகப் பதிந்து செல்வதும் பதித்துச் செல்வதுமே அவரது நோக்கம். அவர் சார்ந்த அமைப்பின் நோக்கமும் அதுவாகவே இருப்பதால் இது அவருக்கு கைவந்த கலையாகிறது.

சமூக சிந்தனைகளே ஒரு உண்மையான எழுத்தாளருக்கு தேவை. அந்த வகையில் இவரது ஒவ்வொரு சிறுகதையும் ஒரு சம்பவம் மட்டுமல்ல அது ஒரு படிப்பினையுமாகும்.

வாழ்த்துக்களுடன்.
மகுடம் வி. மைக்கல் கொலின்
(ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு நான்.....

என்னுடைய மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு. பதினொரு கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. பதினொன்றும் பதினொரு பிரச்சினைகள். நான் வாழ்வில் சந்தித்தவைகளே இவைகள். இவை யாவையும் 2020 ஆம் ஆண்டில் எழுதியவைகளே.

சிறுகதைகள் சம்பவங்களின் விபரிப்பு என்பதை எனது அடிப்படையாகக் கொண்டே எழுதுகிறேன். எதையும் திட்டமிட்டு நான் எழுதுவதில்லை. அதில் எனக்கு நாட்டமுமில்லை. கதைகள் யாவும் புலம்பெயர்ந்த ஈழத்தவர்களின் அனுபவங்களே. இங்கிலாந்து வாழ்வின் அலங்கோலங்களைக் கதைகளாக்கி இருக்கிறேன். நான் கூறுவதைவிட நீங்கள் படித்து அறிவதே நன்று.

இத்தொகுப்பின் பின்னணியில் இயங்கியவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டியுள்ளது.

இந்தத் தொகுப்புக்கு தன் பார்வையினை அழகாகத் தந்த டென்மார்க்கைச் சேர்ந்த நக்கீரன் மகளுக்கு என் நன்றிகள். இத் தொகுப்பிலுள்ள எழுத்துப் பிழைகளை ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் அட்டைப்படத்தை வரைந்து தந்த திரு கோ. கைலாசநாதனுக்கும் அட்டைப்படத்தை அழகுற அமைத்துத் தந்த என் மகன் ரமணனுக்கும் தேவையான ஆலோசனைகள் கூறிய என் மனைவிக்கும் இதர குடும்பத்தாருக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகள். இப் புத்தகம் சம்பந்தமான விநியோகப் பொறுப்புகளை பொறுமையோடு செய்கின்ற சரண்யா தனபாலசிங்கத்திற்கும் என் மனம் நிறைந்த நன்றிகள். இறுதியாக இத் தொகுப்பினை வெளியிடும் மகுடம் பதிப்பகத்தாருக்கும் அதன் உரிமையாளர் மைக்கல் கொலின் அவர்களுக்கும் வணசிங்க அச்சகத்தினருக்கும் நன்றி கூறுவதில் மகிழ்கிறேன்.

மு. தயாளன் (natkuna21@gmail.com)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக அக்கறையுள்ள எழுத்து

சிறுகதை இலக்கியத்திற்கான வரையறைகளை பலர் கூறியிருந்தாலும் அதற்கென்று சரியான திட்டவட்டமான வரையறையைச் சொல்லமுடியாது.

" சிறுகதை எளிய கருப்பொருளைக் கொண்டிருக்கவேண்டும்" என்று சிறுகதையின் தந்தையெனப் புகழப்படும் அன்ரன் செகோவ் அவர்களும் "சிறுகதையானது சுருக்கமும் செறிவும் கொண்டிருக்கவேண்டும்" என எழுத்தாளர் ஜேம்ஸ் கூப்பர் லாரன்ஸ் அவர்களும் குறிப்பிட்டுள்ளதைப்போல ஒவ்வொரு எழுத்தாளர்களும் சிறுகதை பற்றிய இலக்கணங்களை வெவ்வேறாகவே குறிப்பிட்டுள்ளனர்.

அளவில் சிறியதாகவும், எழுத்தாளன் சொல்ல வந்த விடயம் வாசகனைச் சென்றடைந்து, அவனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருப்பின் அது நல்ல சிறுகதை என்றே நான் கருதுகிறேன்.

இன்றைய சமூக வலைத் தளங்களின் வளர்ச்சியினால் கடந்த காலங்களை விட பல எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர். எல்லா எழுத்துகளும் சமூகத்திற்கோ அல்லது தனிமனிதனுக்கோ பயனுடையதாக இருப்பதில்லை என்பது கவலைக்குரியதே. எந்த இலக்கியமானாலும் சமூகத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பங்காற்ற வேண்டும். அந்தவகையில் " அப்பாக்களும் அம்மாக்களும்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பில் உள்ள பதினொரு சிறுகதைகளும் சமூகம் சார்ந்த கதைகளாகவே எழுதப்பட்டுள்ளமை மனதிற்கு நிறைவைத் தருகிறது. "காலத்தின் கண்ணாடி" அல்லது "காலத்தின் குரல்" இலக்கியம் என்பர். எழுத்தாளர் கரவை மு. தயாளன் தன் கதைகளில் அவர் பிறந்த மண்ணிலும் வாழும் மண்ணிலும் நாளாந்தம் நடக்கின்ற விடயங்களையும் மனிதர்களையும் பிரதிபலிக்கின்றார் என்றால் மிகையல்ல. உலகையே தன் ஆளுமைக்குட்படுத்திக்கொண்டிருக்கும் "கொரோனா கோவிட் 19" இன் இக்காலப்பகுதியில் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை லாவகமாக வெளிப்படுத்துகிறார்.

" ஒருநாள் ஒரு மனிதன் ஒரு குடும்பம்" என்ற கதையில் இன்னல் மிகுந்த இச் சூழ் நிலையிலும் அடுத்தவரின் பணத்தைச் சுரண்டும் மனிதர்களை தன் கதாபாத்திரத்தினூடாகக் காட்டி வாசகனைச் சிந்திக்க வைக்கிறார். எழுத்தாளர் கரவை மு. தயாளன் தன் அனுபவத்தின் வாயிலாகப் புனைவுகளின்றிக் கதை மாந்தரூடாகத் தான் சொல்ல வந்த கதையை அழகாக நகர்த்துகிறார். "அப்பாக்களும அம்மாக்களும் " என்ற கதையில் பல புலம் பெயர்ந்த பெற்றோரின் நிலையை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளார். பாசத்தை ஊட்டி வளர்த்த வயதான பெற்றோரிடம் பணத்திற்குக் கணக்குப் பார்க்கும் பிள்ளைகளின் சுயநலத்தைக் காட்டுகிறார். நாளை பெற்றோராகும் நீங்களும் எதிர்காலத்தில் இந்நிலைக்கு தள்ளப்படலாம் என வலியுறுத்துகிறார்.

எழுத்தாளர் பிறந்த மண்ணில் அங்கே மண்ணுக்காகப் போராடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுத்திறனாளியாக இருப்பவர்களின் வலியைக் கதையூடாக வாசகனைச் சென்றடைய வைக்கிறார். மண்ணுக்காகப் போராடியவர்கள் ஊனமுற்று வறுமையில் வாடும்போது அவர்களுக்கு உதவாமல், அவர்களைக் காரணம் காட்டி புலம்பெயர்ந்த நாம் ஆடம்பரவாழ்க்கை வாழ்வதோடு கோவில்களுக்குச் செலவிடுதல் எத்தனை மனிதமற்ற செயல் என்பதையும் எழுத்தாளர் தனது கதையில் சாடுகிறார். "ஒரு சாமானியனின் அழுகை" என்ற கதையில் சமூகத்தில் உள்ள பல பிரச்னைகளைக் கண்டு அழும் ஒரு நகைச்சுவையான பாத்திரத்தைப் படைத்திருந்தார். சமூக அக்கறை கொண்டவர்கள் மற்றவர்களால் கோமாளிகளாகப் பார்க்கப்படுகிறார்கள் என்பதையும் கதையூடாகப் புரியவைத்துள்ளார். உண்மையில் அந்தக்கதைத் தலைப்பே இந்தத்தொகுப்புக்கு மிகப்பொருத்தமானதாக இருக்குமென எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் இந்நூலில் உள்ள ஒவ்வொரு கதையும் சமூகத்தில் நடக்கின்ற நாளாந்த பிரச்சனைகளைக் கண்டு கவலையுறும் ஒரு சாதாரண மனிதனின் உணர்வாகவே இருக்கிறது. இவ்வாசிரியர் இந்தப் 11 கதைகளிலும் ஒருபக்கம் சார்ந்து கதைகளை வெளிப்படுத்தவில்லை. புலம்பெயர்மக்களின் ஆடம்பரத்தைச் சொல்வதோடு இன்னொரு கதையில் புலம்பெயர் மக்களின் நிலையறியாது பணம் கேட்கும் தாயகமக்களையும் காட்டுகிறார். மண்ணுக்காகத் தம்மைக் கொடுத்தவரின் தியாகத்தை மதிப்பதோடு அவர்கள் செய்த தவறுகளையும் சுட்டிக்காட்டுகிறார். அதேபோன்று பெற்றோரைப் பற்றிச் சிந்திக்காத பிள்ளைகளையும் பெற்றோரின் வரட்டுக் கௌரவத்தால் அவதியுறும் பிள்ளைகளையும் காட்டியுள்ளார். இவ்வாறு வெவ்வேறு கண்ணாடிகளூடாகச் சமூகத்தைப் பார்த்துக் கதைகளை எழுதியுள்ளார். இதுபோன்று மேலும் பல சமூகக்கதைகளை கரவை மு. தயாளன் தமிழ் உலகிற்குத் தரவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இவருடைய கதைகள் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கும் எம் சமூகத்திற்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.
சமூக அக்கறையுள்ள எழுத்து காலத்தை வெல்லும்

**நக்கீரன் மகள் - டென்மார்க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாக்களும் அம்மாக்களும்

இப்படி ஒரு நிலைமை வருமென்று நான் நினைக்கவேயில்லை. நானும் என் மனைவியும் ஒன்றாகத் திரிந்து ஒன்றாகவே யாவும் செய்து பழக்கப்பட்டிருந்தோம். கை நிறையச் சம்பாதித்தோம். சம்பாதித்த எல்லாவற்றையும் பிள்ளைகளுக்கே கொடுத்தோம். என் மனைவி அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வாள்.

" எங்களுக்கென்று கொஞ்சக் காசு சேருங்கோ.பின்னால் அது உதவும்"

நான் கண்ணைமூடிக் கொண்டு பிள்ளைகளுக்குச் செலவு செய்யும் போது மேலுள்ள வசனத்தை அவள் சொல்லத் தவறுவதில்லை.

அவள் சொல்லுவது நியாயமாகப்பட்டாலும் நான் பணத்தை எங்களுக்காகச் சேமித்ததில்லை.

இப்போது எங்களுக்குப் பெரிதாக வருமானம் இல்லை. பென்சன் பணம் மட்டும் வருகிறது. அப் பணம் வீட்டு வாடகையோடு சாப்பாட்டுக்குமாக முடிந்துவிடுகிறது.

ஒரு பத்திரிகை வாங்குவதற்குக் கூடக் கையில் பணம் இருப்பதில்லை. பிள்ளைகளிடம் கேட்பதற்கும் பயம். கேட்டால் சினப்பார்கள்.

என் மனைவிக்கு என்னைப் பார்க்கும்போது கவலை. சிலவேளைகளில் பிள்ளைகள் வரும்போது

"அப்பாவுக்கு பேப்பர் வாங்கக் காசில்லையாம் குடுங்கோ" என்பாள். அவர்கள் கேட்காதமாதிரி இருந்துவிட்டுப் போய்விடுவார்கள். அவர்கள் மேல் உள்ள ஆத்திரத்தில் மனைவி என்னைப் பேசுவாள்.

" அப்பவே நான் சொன்னனான் உது நடக்குமெண்டு. நாலு காசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து வைத்திருந்தால் உதுகளிட்டைக் கையேந்தத் தேவையில்லைத் தானே"

நான் கேட்டுக் கொண்டு பேசாமலிருப்பேன்.

ஒரு நாள் என்னுடைய மகனும் மகளும் வீட்டுக்கு வந்தார்கள். எங்களுடைய கைப்பேசிக்கான மாதாந்தக் கட்டணத்தை அவர்கள்தான் செலுத்தி வருகிறார்கள். திடீரென்று இருவரும் வந்திருப்பதால் ஏதோ முக்கியமான காரியமாக இருக்கவேண்டுமென்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

முதலில் மகனே பேச்சைத் தொடங்கினான்.

" அப்பா உங்கடை கைப்பேசி நீங்கள் இருவரும் பெரிசாகப் பாவிக்கிறமாதிரித் தெரியவில்லை. மாதம் மாதம் கட்டிற காசு வீண் போல எனக்கும் அக்காவுக்கும் படுகுது. அதனாலை மாதாந்திர ஒழுங்கிலிருந்து மாற்றப் போறம். இனிமல் தேவை ஏற்படேக்கை காசு போடிற ஒழுங்குக்கு மாற்றப் போறம்"

என்று சொல்லிவிட்டு எங்களுடைய பதிலையே எதிர்பாராமல் கைப்பேசியை வாங்கி மாற்றினார்கள்.

மாற்றும் போது அக்கா நீ அப்பாடை போனுக்குக் காசு போடு நான் அம்மாடை போனுக்குப் போடிறன் என்று தாங்களே தீர்மானித்து எல்லாவற்றையும் மாற்றி விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

என் மனைவிக்கு எதுவும் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இனிமல் எங்களுக்குக் கைப்பேசியும் இல்லையாம்"

என்று சுருக்கமாக அவளுக்குக் கூறினேன். அவள் சிறிதுநேரம் திகைப்போடு என்னைப் பார்த்தாள். என்னை அவள் வேதனையோடு பார்ப்பது போலிருந்தது.

"எந்த நேரமும் போன் பார்த்தபடி இருப்பியள் இனி என்ன செய்யப்போறியள்?"

நல்ல கேள்வி. இதற்கு நான் பதில் சொன்னால் நான் பணம் சேர்க்கவில்லை எனச் சத்தம்போடத் தொடங்கிவிடுவாள். அவளைப் பார்த்து ஒரு புன் சிரிப்போடு பேசாமல் இருந்துவிட்டேன்.

இது நடந்து இருவாரங்களாகி விட்டன. அவர்கள் போட்டுவிட்ட இருபது பவுண்களும் முடிந்துவிட்டது. கைப்பேசியை உபயோகிக்க முடியாது. எனக்கு ஏதோ காட்டிலை இருக்கிற மாதிரி உணர்வு. ஏதோ முழு உலகத்தோடும் எனது தொடர்பு அறுந்துவிட்டது போன்ற உணர்வு. நிம்மதியாக இருக்க முடியவில்லை. என்னுடைய இந்த உணர்வை என் மனைவி புரிந்து கொண்டாள்.

வீட்டின் சாதாரண தொலைபேசியை (land line) எடுத்து மகளுக்கு எங்களது கைப்பேசியின் காசு முடிந்து விட்டதாகக் கூறினாள்.

"தம்பியோடு கதைச்சிட்டுக் கதைக்கிறன்" என்று சொன்னாள். எனக்குத் தெரியும் என்ன பதில் வருமென்று. பாவம் அவவின்ரை முயற்சியை ஏன் குழப்புவான் என்று பேசாமல் இருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி அவசரஅவசரமாக அடித்தது. மகனே கதைத்தான்.

“அம்மா..உங்களுக்கு அவசரமெண்டால் வீட்டுத் தொலைபேசியைப் பாவிக்கலாம்தானே. ஏன் கைப்பேசி ?. இப்ப எனக்கும் அக்காவுக்கும் கொஞ்சம் நெருக்கடி. எல்லாம் சரிவரக் காசு போடிறம்” என்று சொல்லிவிட்டு அவன் வைத்துவிட்டான்.

என் மனைவி பிரமை பிடித்தாற்போல என்னைப் பார்த்தாள். நான் எனது கையாலாகத்தனத்தையும் ஊதாரித் தனத்தையும் நினைத்து மனதிற்குள் அழுதேன்.

சிறிது நேரம் இருவரும் எதுவும் கதைக்கவில்லை. ஆளை ஆள் பார்த்துக் கொண்டிருந்தோம். எனக்கு இரண்டு வருமானம் வருகிறது. எனது வேலை ஓய்வூதியமும் அரச ஓய்வூதியமும் வருகிறது. பெரியளவில் இல்லை. அவற்றை எங்களின் சாப்பாட்டுச் செலவுக்குப் பாவிப்போம். பெரும்பாலும் மிஞ்சுவதில்லை.

பிள்ளைகளின் வற்புறுத்தலால் வீட்டு வாடகைக்கு அரசாங்கத்துக்கு விண்ணப்பிக்கும்படி பிள்ளைகள் கூறினார்கள். அவர்களே பத்திரமும் எடுத்து வந்தார்கள். அந்தப் பத்திரத்தில் ஒரு கேள்வி.

உங்களின் வீட்டு உரிமையாளர் உறவினரா? ஆம் என்றுதான் போடவேண்டும். எதற்கும் அவர்களையும் கேட்போமே? மனைவிக்கு விடயத்தை விளங்கப்படுத்திக் கேட்கும்படி கூறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து பதில் வந்தது.

" அப்பாவுக்கு விசரே. இல்லை எண்டு போடச் சொல்லுங்கோ "

எப்போதும் உண்மை சொல்ல வேண்டும் என்று சொல்லி வளர்த்த என் பிள்ளைகள் என்னைப் பொய் சொல்லும்படி கூறுகிறார்கள்.

ஒரு புன்னகையோடு என் மனைவியைப் பார்த்தேன்.

அந்தப் புன்னகையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட என் மனைவி

" உங்களுக்கு எப்பவும் பகிடிதான் " என்று கூறிவிட்டு அப்பால் நகர்ந்தாள்.

மகளுக்கு ஒரு பிள்ளை. மகனுக்கு இரண்டு. அவர்கள் வேலைக்குப் போகும்போது தம் பிள்ளைகளை எங்கள் வீட்டில் விட்டுவிட்டுப் போய் விடுவார்கள்.

பேரப் பிள்ளைகளைப் பார்ப்பது எங்களுக்குச் சந்தோசமான விடயம். இதனால் இதனை நாங்கள் பாரமாக நினைப்பதில்லை.

எங்களுக்கு வருத்தமாக இருந்தாலும் நாங்கள் அவர்களின் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும்.

சிலவேளைகளில் சொல்ல நாத்துடிக்கும். ஆனால் சொல்ல மாட்டேன்.

இப்படியே காலம் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இருவரும் வந்தார்கள். இண்டைக்கு என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமலையோவெனப் பயந்து கொண்டிருந்தேன்.

இந்த முறை வீடு பற்றியதாகவே இருந்தது. வீடு என் பெயரில் இல்லை. அது மகன் பெயரில் இருந்தது. எங்களைத் தங்கள் வீடுகளில் வந்திருக்கும்படியும் தான் வீட்டை விற்று அரைவாசிப் பணத்தை அக்காவுக்குக் கொடுத்தபின் மிகுதியைத்தான் வியாபாரம் செய்யப் போவதாகவும் கூறினான்.

இந்த வீட்டுக்குரிய முன்பணத்தைக் கொடுத்தது நான்தான். உண்மையில் அது என் வீடு. என் பெயரில் இல்லாததால் அவர்கள் வீடு ஆகிவிட்டது. நான் போட்ட பணத்தைத் தருவதாகவும் சொல்லவில்லை. பதிலாக எல்லாவற்றையும் தங்களுக்கிடையில் பகிர்வதாகவே பேச்சு நடக்கிறது.

இப்போது நான் கதைத்தாக வேண்டிய கட்டாயம்.

" அது சரிவராது தம்பி நாங்கள் தனிய இருக்கிறதுதான் நல்லது. " என்றேன் நான்.

"இப்ப வீட்டு விலை உச்சத்திலை இருக்குதப்பா. இப்ப விற்றால் நல்ல லாபம் வரும்" என்றான் மகன்.

" அப்ப உனக்கு அப்பா அம்மாவிடை விருப்பத்தை விடப் பணம் பெரிதாகப் போச்சுதோ" என் அன்பு மனைவி.

அவளுக்கு என்னைப் பற்றியும் என் விருப்பங்கள் பற்றியும் நல்லாகத் தெரியும்.

" அப்பிடி இல்லை அம்மா. இப்ப நாங்கள் என்ன உங்களை நடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவிலை விடப் போறமே. எங்கடை வீட்டுக்குத்தானே வரச் சொல்லிறம். நீங்கள் மாறி மாறி எங்கடை வீடுகளிலை இருக்கலாம்தானே." என்றாள் மகள்.

சில நிமிடங்கள் நிசப்தம்.

" மாறி மாறி எங்கடை வீடுகளிலை எண்டால் ஒரு கிழமை அம்மா என்ரை வீட்டிலை இருக்க அப்பா அக்கா வீட்டிலை இருக்கலாம். அடுத்த கிழமை மாறி இருக்கலாம்" என்று மகன் விளக்கினான். நாங்கள் இருவரும் திடுக்கிட்டுவிட்டோம். அபாயகரமான ஒரு கட்டத்தை நாங்கள் நெருங்கி விட்டதாக உணர்ந்தேன்.

எங்களிருவரையும் நிரந்தரமாகவே பிரிக்கப் பார்க்கிறார்கள். கிழமைக்குக் கிழமை வீடு மாறுவோம் ஆனால் சந்திக்க மாட்டோம்.

"இல்லைத் தம்பி இது சரிவராது. நாங்கள் பிச்சைக்காரர மாதிரி உங்கடை வீடுகளிலை இருக்கேலாது"

நான் இப்படிக் கூறியது அவர்கள் இருவருக்கும் பிடிக்கவில்லைப் போலும்.

மகள் தான் சொன்னாள்.

"இரண்டுபேரும் கவனமாய்க் கேளுங்கோ. எங்கடை முடிவை மாத்தேலாது. இன்னும் ஒரு வாரம் கழிச்சு வருவம். தயாராக இருங்கோ"

அடாவடித்தனமாக இருவரும் நடந்தமை எங்கள் இருவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை இரணமாக்கியது. நாங்கள் எதுவும் பதில் சொல்லவில்லை. அவர்கள் போய்விட்டார்கள்.

என் மனைவி பதறிப்போய் விட்டாள்.

அடுத்த நாள் காலை நான் என் நண்பரைச் சந்தித்தபோது நடந்தவற்றைக் கூறினேன். என் நண்பன் மிக நல்லவன்.

"பயப்பிடாதை..நாங்கள் ஒரு வீடு பார்ப்பம். அரசாங்கம் வாடகை தருகுதுதானே. பிறகேன் பிள்ளையளோடை ஒட்டிக் கொண்டிருப்பான்."

அவனுடைய ஆலோசனை எனக்குத் தெம்பைத் தந்தது.

வீட்டுக்குவந்து விடயத்தை மனைவிக்குச் சொன்னேன்.

"அது சரியப்பா.. அவள் பாவம் பிள்ளையளை ஆரிட்டை விட்டிட்டுப் போவாள்."

" நீரேன் அதைப்பற்றிக் கவலைப்படிறீர். அவை எங்களைப் பற்றிக் கவலைப்படாமலிருக்கினம்..நீர் தேவையில்லாமல் .."

நான் இப்படிக் கூறும் போது அவள் அழுதுவிட்டாள். என் மனைவி மென்மையான மனம் கொண்டவள். பேரப்பிள்ளைகளின் பாசம் அவளை வருத்தியது. என்னையுந்தான். அவள் வெளியில் அழுகிறாள் நான் உள்ளுக்குள் அழுகிறேன். அவ்வளவுதான்.

அடுத்த நாள் என் நண்பன் நல்ல செய்தியோடு வந்திருந்தான். அவனுடைய வீட்டிலிருந்து மூன்றாவது வீடு காலியாக உள்ளதென்றும் அது இரண்டறைகள் கொண்ட வீடென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பணமாக இருமாத வாடகை கொடுக்க வேண்டும் என்றும் கூறினான். கடைசியாகக் கூறிய வசனம் என்னைக் குழப்பியது. மனைவியைப் பார்த்தேன். அவளின் முகத்தில்

" உதுக்குத்தான் சொன்னனான் கொஞ்சக் காசைச் சேர்த்து வையுங்கோ என" என்ற வசனம் தெரிந்தது. என் நண்பனுக்கு விடயம் புரிந்துவிட்டது.

" என்ன முன்பணத்துக்குத் தானே யோசிக்கிறியள். அதெல்லாம் நான் குடுத்திட்டன். நீங்கள் சாமான் எலாலாத்தையும் கட்டி நாளைக்குப் புறப்படத் தயாராகுங்கோ" என்று நண்பன் கூறினான்.

"நாளைக்கே போகவேணுமா? " என்று என் மனைவி இழுத்தாள்.

அவளின் பிரச்சினை தன் பிள்ளைகளுக்குச் சொல்லாமல் செல்வதா? என்பதுதான். நான் நண்பனைப் பார்த்து

" எங்களுக்குக் கனக்கச் சாமான் இல்லை. நாளைக்குக் காலைமை போவம்" என்று கூறி அவனை அனுப்பிவிட்டேன்.

என் மனதில் ஒரு நிம்மதி பரவியது. பிள்ளைகளில் தங்கி இனி வாழத் தேவையில்லை என்ற பெருமிதம் எனக்குள் பரவிக் கொண்டிருந்தது. அவர்களுக்குச் சொல்லாமலே அடுத்த நாள் புறப்பட்டுவிட்டோம். மனைவி இப்பவும் நான் கொஞ்சம் பணம் சேர்த்திருக்கலாம் என்ற பரணியைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

**காற்றுவெளி - 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் காணோம்

நான் நடந்து கொண்டிருக்கிறேன். மனம் பலவாறு பலவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருக்கிறது. பாதையில் இருக்கின்ற கற்கள் இடைக்கிடை என்னைப் பதம் பார்க்கின்றன. சிறிது அமைதியாக இருந்து கால்களைத் தடவி விடுகிறேன். ஏன் என்னை அடித்தாயே என்று கோவிக்க முடியுமா!

நானாகப் போய்க் கல்லோடு முட்டிவிட்டு ஏன் கல்லைக் கோபிக்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாகச் சிறிது நொண்டியபடி நடக்கத் தொடங்குகிறேன். கார்கள் போவதும் வருவதுமாகச் சுற்றாடலை அசுத்தப்படுத்திய வண்ணம் சென்று கொண்டிருக்கின்றன. இதற்குக் கார்களைக் குற்றம் சொல்ல முடியுமா? அல்லது கார் ஓட்டுபவனைக் குற்றம் சொல்ல முடியுமா?

நேற்று வந்த கடிதம் இன்னும் என் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. இலங்கையிலுள்ள ஒரு நண்பனிடமிருந்து வந்திருந்தது. போராடிக் களைத்து எல்லாவற்றையும் இழந்த ஒரு போராளி. இன்று ஒரு நேர உணவுக்கு வழியின்றி துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

உதவி கேட்டுக் கடிதம் எழுதியிருந்தான்.

அவன் ஒரு எழுத்தாளனும் கூட. நல்லாக எழுதுவான். அவன் தூக்கிய உலோக ஆயுதத்தைவிட அவனது பேனா பலம் வாய்ந்தது. அவன் இந்தச் சமுதாயத்துக்குத் தேவையானவன். அவனுடைய எழுத்துகள் சமுதாயச் சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்டவையே.

அவன் எழுதிச் சமுதாயம் திருந்திவிடும் என்று நான் நினைக்கவில்லை. ஏன் அவனுக்கும் அந்த எண்ணம் இல்லை. பாரதி எழுதிச் சமுதாயம் திருந்தவில்லையே. இப்போவெல்லாம் பாரதியின் கவிதைகளைப் பேச்சாளர்கள் மேற்கோள் காட்டுவதற்குத் தானே பாவிக்கிறார்கள்! எது என்னவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். நான் அவன் வாழ்க்கைக்கு உதவியாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பதை நிறுத்திவிட்டு என் கைப்பேசியில் வங்கிக் கணக்கைத் திறந்து பார்க்கிறேன். நூற்றி நாற்பது பவுண்கள் மாத்திரமே உண்டு. அதுவும் இன்னும் ஒரு கிழமையில் எரிவாயுக் கட்டணமாக எடுத்து விடுவார்கள்.

கடினமாக உழைக்கிறேன். ஆனாலும் சமாளிக்க முடியவில்லை.

எனக்கே இப்படி என்றால் எவ்வித வருமானமுமில்லாமல் விழுப்புண்களோடு வாழும் அவன் எப்படிச் சமாளிப்பான்?

மனம் குழம்பி வேதனை கொள்கிறது.

எப்படியாவது யாரிடமாவது கடன் வாங்கியாவது அவனுக்கு உதவ வேண்டும். சரி ஒரு நண்பனைக் கேட்போமென்று நினைத்து அவன் வீட்டை நோக்கி என் கால்கள் நடக்கத் தொடங்குகின்றன. நான் சென்றபோது அவன் அங்கிருந்தான். நேரே கடன் கேளாமல் எழுத்தைப் பற்றியும் எழுத்தின் பயன் பற்றியும் பாரதி, ரவீந்திநாத் தாகூர், மாக்சிம் கார்க்கி என்பவர்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்கிறேன். அவனும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனுடைய மனைவி அவனை உள்ளே வரும்படி கூப்பிடுகிறாள். தேநீர் எடுத்து வருவதாகக் கூறிவிட்டு அவனும் உள்ளே செல்கிறான்.

உள்ளே சென்ற அவனிடம் அவன் மனைவி

"ஏனப்பா உந்த மனிசன் வந்து அலம்பிக் கொண்டிருக்குது" என்று கூறுவது என் காதுகளுக்குக் கேட்கிறது. அது எனக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கும் என்ற கவலை அவளுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

நான் இதற்கெல்லாம் கோவிக்க முடியாது. வந்த காரியம் முடிந்தாக வேண்டுமே. எனக்குக் கடிதம் எழுதிய இலங்கை நண்பனை இவனுக்கும் தெரியும். ஒன்றாகப் படித்தவர்கள். அவன் திரும்பி வந்ததும் இலங்கையிலிருந்து வந்த கடிதத்தைப் பற்றிக் கூறுகிறேன்.

" உவனை அப்பவே சொன்னனான் உந்த இயக்கங்களுக்கை போகாதை எண்டு. போனவர் அனுபவிக்கட்டும். உவங்களுக்கு அனுப்புறதைவிடச் சாதாரண சனத்துக்கு அனுப்பி அதுகளின்ரை பசியைத் தீர்க்கலாம்" என்றான். எனக்குத் திக்கென்றிருந்தது. ஒரு விடுதலைப் போரை எவ்வளவு சுலபமாகத் தூக்கி எறிந்து பேசுகிறான்.

எல்லாரும் தூக்குகிற காரணத்தை இவனும் தூக்கிவிட்டான்.

"மச்சான் நீ ஏதும் சாப்பிடாமல் இருக்கிறவைக்கு அனுப்பினனீயே" என்றேன்.

அவனால் பதிலளிக்க முடியவில்லை. கதையை மாற்ற முயற்சித்தான்.

"இப்படி எவ்வளவு நாளைக்கு மச்சான் தப்பப்போறியள்"

அவன் நான் கேட்டதற்குப் பதிலளிக்கவில்லை. இனிமேல் அங்கிருப்பது பயனில்லை என்று எண்ணி எழும்பி நடக்கத் தொடங்குகிறேன். என்றாலும் ஒரு நப்பாசை. கடைசியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனைப் பார்த்து இலங்கை நண்பனுக்கு ஏதும் உதவி செய்ய முடியுமா என்று கேட்கிறேன்.

அவன் என்னைப் பார்த்துச் சத்தமாக ஏதோ சொன்னான். நான் நினைக்கிறேன் அவன் சொன்ன வசனங்கள் அவன் மனைவியைத் திருப்திப்படுத்தியிருக்கவேண்டும். இப்படியும் சில ஜென்மங்கள் என்று மனத்துள் நினைத்தவண்ணம் என் நடையைத் தொடர்கிறேன். நடந்து கால்கள் நோகத் தொடங்கி விட்டன. இந்த நடையைப் பற்றிக் கூற வேண்டும். நான் ஒன்றும் உடல் நலத்துக்காக நடப்பதில்லை. மனதில் ஏதும் பிரச்சினைகள் மனதைக் குடையும் போது என்னை அறியாமலேயே நடக்கத் தொடங்கி விடுவேன். நான் நடக்கிறேனா அல்லது மனம் நடக்கிறதா என்பது எனக்குப் புரிவதில்லை. அப்படி ஒரு நடைதான் இன்றைக்கும். இலங்கையிலிருந்து கடிதம் அனுப்பியவன் என்னோடு படித்தவனே. இலங்கையில் இன விடுதலைப் போராட்டம் வேகமாக வளர்ந்தபோது உணர்ச்சி வசப்பட்டு இயக்கத்தோடு இணைந்தவன் அவன். என்னையும் அழைத்தான். மறுத்து விட்டேன்.

நான் மறுத்ததற்குப் பல காரணங்கள் இருந்தாலும். அவன் போனது உண்மையில் இன விடுதலையை நோக்கியதாகவே இருந்தது.

பல சமர்களை வெற்றிகரமாக முடித்த அவன் இன்று அநாதரவாக நிற்கிறான். அவன் மனைவி மாறிக்கட்டத் துணியில்லாமல் இருப்பதாக எழுதியிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் அநாதைப் பிள்ளைகளையும்

அநாதை இல்லங்களையும் பார்க்கிறார்களே ஒழியப் போரால்

சிதைந்து போன தங்களை யாரும் கவனிக்க மறுக்கிறார்களே

என அவன் கலங்கி எழுதியிருந்தான்.

நியாயமான கேள்விதான்.

அநாதைப் பிள்ளைகளைப் பராமரிப்பதை பலர் மிகப்

பெருமையாகச் சொல்வதை நான் செவிமடுத்திருக்கிறேன்.

இவற்றையெல்லாம் நினைக்க நினைக்க என் கால்கள்

உரமடைந்து வேகமாக நடக்கின்றன.

ஆலயம் ஒன்றைத் தாண்டிக் கொண்டிருக்கிறேன்.

அழகான ஆலயம். மிகுந்த பணச்செலவில் கோபுரம்

அமைத்திருக்கிறார்கள். உள்ளே நுழைகிறேன்.

பல மனிதர்கள் சிரித்த முகத்தோடு ஊரைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் சமீபத்தில் அங்கு சென்று செலவு செய்த வீரப்பிரதாபத்தைக் கையாட்டிக் காலாட்டி நாடகமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

கடவுளுக்குப் பூசை நடந்து கொண்டிருக்கிறது. பூசையைக் கவனிப்பதைவிட தாங்கள் ஊரில் செய்த சாகசங்களைச் சொல்வதில் அவர்கள் நேரம் கழிந்து கொண்டிருந்தது. ஒருவர் கோயிலென்றும் பாராமல் தான் பத்துப் போத்தில் பியர் குடித்ததைப் பெருமையாகக் கூறிக் கொண்டிருந்தார். கோயிலின் தர்மகர்த்தா ஒருவரை அணுகிக் கதைக்கத் தொடங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் ஆலயம் சார்பாகச் செய்யும் அறப்பணிகள் பற்றி விலாவாரியாகச் சொன்னார்.

" எங்கள் ஆலயம் ஒன்பது சிறுவர் காப்பகங்களை நிறுவியுள்ளது" என்று பெருமையாகச் சொன்னார். நானும் அவரை அவரின் பணிகளுக்காக வாழ்த்தினேன். அத்தோடு மெதுவாக முன்னைய போராளிகள் படுந்துன்பத்தைப் பற்றிக் கூறினேன். அவர்களுக்கும் ஆலயம் உதவிக்கரம் நீட்டலாமே என்றேன். அவருடைய முகம் மாறியது.

" அவங்களெல்லாம் றவுடிக் கூட்டமாய் மாறியிட்டாங்கள். போராளிப் பொம்பிளையள் அங்கை சரியாய் இல்லை. அதுகளுக்கு உதவி செய்யிறது கடவுளுக்கே அடுக்காது" என்று கோபமாகக் கதைத்தார்.

நான் மெதுவாக

" நாட்டுக்காகப் போராடிய பிள்ளையள் ஏன் இப்படி மாறினவை எண்டு கொஞ்சம் யோசியுங்கோ. அவர்களை நீங்கள் புறக்கணித்ததாலைதானே இவை நடந்தது.." என்னுடைய கூற்றை அவரால் மறுக்க முடியவில்லை. என்னிடமிருந்து தப்புவதற்கான வழியைத் தேடுகிறார் என்பது புரிந்தது.

அந்த நேரம் பார்த்துக் குருக்கள் அவரைக் கூப்பிட மெதுவாக நகர்ந்துவிட்டார்.

அந்த ஆலயத்தின் ஒரு மூலையில் சற்றுக் காலாற அமர்ந்தேன்.என்னுடைய அந்த நண்பன் குடும்ப சமேதராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வந்து கொண்டிருந்தான். நான் பணம் கேட்டு மறுத்த அந்த நண்பன்தான்.

அவனை நோக்கிச் சென்ற தர்மகர்த்தா அவனைத் தழுவிக் குசலம் விசாரித்தார். மிக அந்நியோன்னியமாக அவர்கள் பழகுவது எனக்கு வியப்பாக இருந்தது. மெதுவாக எழும்பி அவர்களுக்கருகில் சென்றேன். என்னை என் நண்பன் எதிர் பார்க்கவில்லை. நான் திரும்பவும் வந்ததால் குழம்பிப்போன தர்மகர்த்தா தான் தப்புவதற்காக என் நண்பனைக் காட்டி

" நீங்கள் இவரைக் கேளுங்கோ . இந்தக் கோயிலின்ரை கோபுரம் கட்டினது இவரின்ரை காசிலைதான்" என்றார். என்னுடைய நண்பரின் முகத்தில் அசடு வழிந்தது. நான் ஏதும் கூறவில்லை. கடவுள் இருப்பதாய்க் கருதும் அறையை எட்டிப் பார்த்தேன். அங்கே அவரைக் காணவில்லை.

அவருக்கும் பிடிக்கவில்லையோ என்னவோ யாருக்குத் தெரியும். மெதுவாக ஆலயத்தைவிட்டு வெளியே வந்து வேகமாக நடக்கத் தொடங்கினேன். எப்படியும் இந்தக் கிழமை ஊரிலுள்ள போராளி நண்பனுக்குக் காசு அனுப்பவேண்டும் என மனதுக்குள் சொல்லிக் கொண்டேன். யாரிடமும் கேட்பதில்லை. என்னால் முடிந்தளவுக்கு அவர்களை காப்பாற்ற வேண்டும் என்று மனதுள் திடசங்கற்பம் கொண்டபடி வேகமாக நடக்கத் தொடங்கினேன்.

**ஜீவநதி - 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ரை இவரின்ரை கதை

"உங்கடை ஆக்களுக்குக் காசை நெடுகவும் அனுப்பிக் கொண்டிருந்தால் நாங்கள் இஞ்சை என்னத்தைச் செய்யிறது"

நான் இப்படித்தான் அவரிட்டைக் கேட்டன். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தன் . முடியேல்லை. கேட்டிட்டன். ஊரிலை இருக்கிறவை இஞ்சை ஏதோ மரத்திலை காசு முளைக்குதென்று நினைக்கினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு இதனாலை வருத்தம். அதுக்கு நானென்ன செய்யிறது. வெளிநாட்டிலை இருக்கிறம் எண்டாப் போலை எங்களுக்கென்ன எல்லாம் கொட்டுதே. நாங்களும் மாடு மாதிரி உழைச்சுத்தானே வாழிறம். இவரின்ரை தமயன் மகளுக்குச் சாமத்தியச் சடங்கு வைக்கவேணுமாம். போதாக்குறைக்கு அவரின்ரை மகள் குதிரை வண்டிலிலை கோலுக்கு வந்திறங்க வேணுமாம். அதுக்கு ஐஞ்சு லட்சம் முடியுமாம் . உடனே அனுப்பெண்டு போனிலை சொல்லிறார். இந்த மடைச்சாம்பிராணிக்கு எதிர்த்துக் கதைக்கத் தெரியாது. தலையாட்டிப்போட்டு ஓடித் திரியிறார். இவருக்குத் தான் ஏதோ டாக்குத்தர் எண்ட நினைப்பு. பெற்றோல் ஸ்ரேசனிலை காசு வாங்கிற தொழில். சொல்லலாம் தானை அண்ணர் பாவமாம். சாப்பாட்டுக்குக் கேட்டாலும் பரவாயில்லை. குதிரையிலை மோளை ஏத்த அவர் கேட்கிறார். இவர் இஞ்ச ஓடித்திரியிறார். எனக்கு வாயிலை வருகுது. சொல்லிப் போடுவன். எவ்வளவுக்குத்தான் பொறுக்கிறது. கட்டின நாளிலையிருந்து இதுதானை தொல்லை. பிள்ளையளுக்கு உடுப்பு வாங்கக் காசில்லை. ரியூசனுக்குக் காசு குடுக்கவேணும். நாளாந்தம் செலவுக்குக் காசு வேணும். லண்டனிலை குடும்பம் நடத்திறதெண்டால் லேசே. கோயிலுக்குப் போனால் வெக்கமாய்க் கிடக்குது. ஒரே சாறியையே கட்டவேண்டிக் கிடக்குது. கோயிலுக்கு வாறவை என்ன விதம்விதமாய்க் கட்டி வருகினை. என்ரை வெக்கத்தையெல்லாம் இந்த மனிசன் எங்க பார்க்குது. ஓடி ஓடிக் கடன் வாங்கிறதுதான் வேலை. போனவருசம் தங்கச்சிக்காறிக்கு வீடு கட்டிக் குடுக்கிறார். நான் பேசினதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உனக்கு நான் தந்தது ராசாத்தி வாழ்க்கை. இல்லையெண்டால் காஞ்சிருப்பாய்" எண்டு திருப்பிக் கத்திறார். என்னை இவர் ஊரிலை வந்துதான் கட்டினவர். இவற்றை அக்காதான் கலியாணம் பேசினவ. நான் ஒண்டும் பணக்காறியில்லை. என்ரை அப்பா ஊரிலை மூட்டை தூக்கிற வேலைதான் செய்தவர். நாங்கள் வருமானம் குறைஞ்ச குடும்பமாயிருந்தாலும் மரியாதையாய் வாழ்ந்த குடும்பம். ஊரிலை வந்து லண்டன் மாப்பிள்ளை எண்டு பந்தா காட்டி வீடும் பத்து லட்சம் காசும் கேட்டவை தானே. அதுவும் அந்தக் காசு தமக்கைக்குத்தான் குடுக்க வைச்சவை. போதாக் குறைக்கு இவரின்ரை தம்பிக்கு மோட்டர்சைக்கிளும் வாங்கிக் குடுக்கவேணுமெண்டு எவ்வளவு ஆட்டம் ஆடிச்சினம். படிப்பும் இல்லை. நல்ல தொழிலுமில்லை. ஆக லண்டன் மாப்பிள்ளை எண்ட கிரீடம் தான். இவரின்ரை தகப்பனைக் கதைக்கவிட்டால் நூலுக்குள்ளாலை நுழைஞ்சு ஊசிக்குள்ளாலை வந்திடுவர். அவர் எனக்கு மாமா தான். ஆனால் நியாயத்தைக் கதைக்கத்தானே வேணும். வாய் முழுக்கப் பொய். தான் லண்டனிலை பெற்றோலியம் கோப்பிறேசனிலை வேலையாம். நானும் என்ரை அப்பா அம்மாவும் அதை உண்மையெண்டு நம்பி அவை சொல்லிறதெல்லாத்துக்கும் ஆடவேண்டியதாய்ப் போய்ச்சுது. கலியாணம் முடிஞ்சு லண்டனுக்கு வந்தாப் போலையெல்லோ இவரின்ரை பொட்டுக்கேடு வெளிச்சத்துக்கு வந்துது. பெற்றோல் நிலையத்தைப் பெற்றோலியம் கோப்பிறேசன் எண்டு பந்தா காட்டியிருக்கிறார். இனியென்ன தாலியை அறுக்கிறதே. நடந்தது நடக்கட்டுமெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தானையை விரிச்சதுதான். நான் இன்னும் இதுபற்றி அப்பா அம்மாவுக்கு வாயே திறக்கேல்லை.

நான் என்ரை அப்பருக்கு எத்தனை முறை இந்தச் சம்பந்தம் வேண்டாம் எண்டு சொன்னன். கேட்டால் தானே. இந்த அப்பா அம்மாவுக்கு ஆரும் ஒரு வெளிநாட்டக்காரனைக் கண்டிட்டால் போதும் கண்ணை மூடிக்கொண்டு எல்லாத்துக்கும் தலையாட்டிப் போடுவினம். எல்லாருக்கும் லண்டன் மாப்பிள்ளை கிடைக்காதாம். அதனாலை வந்ததை விடக் கூடாதெண்டு எல்லாத் திசையிலையும் கடன் வாங்கிக் கட்டி வைச்சவர். நீ லண்டனுக்குப் போயிட்டியெண்டால் உனக்குக் கீழை இருக்கிறவையைக் கூப்பிடலாம் தானை எண்ட நினைப்பும் என்ரை அப்பருக்கு இருந்தது. மாப்பிள்ளைமாரெல்லாம் தாராள சிந்தனை நிறைந்தவை எண்ட நினைப்பு என்ரை அப்பா அம்மாவுக்கு.

இப்ப என்ன நடந்தது? என்ரை தம்பியைக் கூப்பிடலாமெண்டு நினைச்சால் முடியேல்லை. லண்டன் மாப்பிள்ளை கையை விரிக்கிறார். ஆனால் தன்ரை ஆக்களுக்கு அள்ளிக் குடுக்கிறார். அப்பா ஒரே கடிதம் எழுதித் தம்பியைக் கூப்பிடு ..தம்பியைக் கூப்பிடு என்கிறார். அப்பாவும் பாவம் இந்த நேரங்களிலை ஒரு இளந்தாரியை ஊரிலை வைச்சிருக்கிறது நெருப்புக்கை நிக்கிறமாதிரித்தானை. நான் என்னதான் செய்யிறது. இப்ப கூப்பிடிறதெண்டால் குறைஞ்சது இருபது லட்சம் வேணும். யாரிட்டைக் கேட்கிறது. கடன் தரக்கூடிய எல்லாரிட்டையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கியாச்சு. போதாக்குறைக்குச் சிலர் திருப்பித் தரச் சொல்லி நெருக்குவாரம் செய்யினம். இந்த நெருக்கடியுக்கை நாங்கள் தவிச்சுக் கொண்டிருக்கேக்கை நேற்று இவற்றை மாமன்காரன் மகளுக்குக் கலியாணம் சீதனத்துக்குப் பத்து லட்சம் வேணுமெண்டு எழுதியிருக்கிறார்.

உடனை அனுப்பி வை இல்லையெண்டால் என்ரை பிள்ளைக்குக் கலியாணம் நடக்காது. கடைசியிலை நான் தற்கொலைதான் செய்ய வேண்டிவரும் என்று மிரட்டல் வேறை. போதாக் குறைக்கு அந்தக் கடிதத்தோடை இவரின்ரை அப்பா அம்மாவின்ரை சிபார்சுக் கடிதம் வேறை. இவர் சொல்லிறார் மாமன்காரன் ஒரு நாளும் கேட்கயில்லையாம். முதல் முதல் கேட்டிருக்கிறார். எப்பிடியும் குடுக்க வேணுமாம். நான் என்ரை தம்பியைக் கூப்பிட மாட்டனெண்டிட்டு மாமன் கேட்டவுடனே மனிசன் ஒண்டுக்கு இரண்டு வேலை செய்யுது. படுக்க நேரமில்லாமல் ஓடித்திரியுது. இப்ப மாமனுக்காக அங்கையும் இங்கையும் ஓடித்திரியுது. ஆர் குடுக்கப்போயினம்? வாங்கினதைக் குடுத்தால் தானே திருப்பித் தருவாங்கள். இந்த ஓட்டத்தாலை இவருக்குப் பிரசர் வேறை. அண்டைக்கு வேலை செய்யிற இடத்திலை மயங்கி விழுந்திட்டாராம். என்ரை மூத்தவனுக்கு ஸ்கொலர்சிப் பரீட்சை உம் வருகுது. ஆரைக் கேட்டாலும் மூன்று நாலு இடங்களிலை வகுப்புகளுக்கு விடுகினம். என்னாலை ஒரு இடத்துக்கு விடவே காசில்லை. கேட்டால் எரிஞ்சு விழுகிறார். நான் வேலைக்குப் போகலாம் எண்டால் இங்கிலிசு ஒழுங்காய் வராதாம். அவரைப் பார்க்கவும் பாவமாய்க் கிடக்குது. மெலிஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார். முகம் சதையெல்லாம் வற்றி மாறியிட்டுது. கடவுளும் கண்ணைத் திறக்காராம். அவர் எப்பதான் கண்ணைத் திறந்தவர்? எனக்கு அறிவு வந்த நாளிலையிருந்து கண்ணை மூடினபடிதானே இருக்கிறார். என்ரை மனிசனுக்கு நித்திரை முழிச்சு முழிச்சுக் கண் முழி வெளியிலை தள்ளி நிற்குது. மனிசனுக்கு ஓய்வே இல்லை. ஊரிலை இருக்கிறவை இஞ்சை ஏதோ மரத்திலை காசு முளைக்குதெண்டு நினைக்கினம் போலை. காலைமை வேலைக்கெண்டு போனவர். இன்னும் வரயில்லை. வாற நேரமும் தாண்டியிட்டுது. எங்கயேனும் கடன் வாங்கப் போயிட்டாரோ தெரியேல்லை. பயமாய்க் கிடக்குது. மனிசன் எங்கையேனும் மயங்கி விழுந்திட்டுதோ தெரியேல்லை. போகேக்கை தலையிடிக்குதெண்டும் சொன்னவர்.
அண்டைக்கு இவரை டாக்குத்தரிட்டை கூட்டிப் போனால் அவர் இவருக்கு ஓய்வு வேணுமெண்டு சொல்லிறார். இப்படியே போனால் அமுக்கம் கூடி இரத்தநாளம் வெடிச்சிடும் என்று டாக்குத்தர் சொல்லிறார். எப்பிடி ஓய்வெடுக்கிறது.
ஊரிலை இருக்கிற நாசமாய்ப் போனதுகள் காசு காசு எண்டு கேட்டால் இந்த மனிசனும் என்ன செய்யிறது. வெளியிலை வந்து பார்த்தன் கண்ணுக் கெட்டின தூரம்வரை ஆரையும் காணேல்லை. போகேக்கை ஒண்டும் சொல்லவுமில்லை. நேரம் போய்க் கொண்டிருக்குது. அவரின்ரை நண்பர்மாருக்குப் போன் அடிச்சுப் பார்த்தன். அவைக்கும் தெரியேல்லை.

' எதுக்கும் கவலைப்படாதையுங்கோ அக்கா. நாங்கள் இப்ப வாறம்' எண்டு ஆறுதலாய்ச் சொல்லிச்சினம். மனம் பலவிதமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிக்கத் தொடங்கியிட்டுது. என்ரை நெஞ்சு பக்பக் கென்று அடிக்கிறது எனக்கே கேட்குது. பிள்ளையள் அழுகினம். பக்கத்து வீட்டிலை இருக்கிறவையும் தமிழாக்கள்தான். அவையின்ரை கதவைத் தட்டி விசயத்தைச் சொன்னன். அவையும் எங்கடை வீட்டை வந்திட்டினம். இவரின்ரை இரண்டு நல்ல நண்பர் மாரும் வந்திட்டினம்.

"ஏனக்கா இரண்டு மூண்டு வேலை செய்யிறான் இவன்." அவையின்ரை கேள்விக்கு நான் என்ன பதில் சொல்லிறது. அப்ப ஒரு தொலைபேசி வந்தது. என்னை எடுக்க வேண்டாமெண்டிட்டு தாங்கள் எடுத்திட்டினம். எனக்கு நெஞ்சு வேகமாக அடிக்கத் தொடங்கியிட்டுது. அவை போனிலை கதைக்கிறதைக் கேட்க எனக்குப் பயம் வந்திட்டுது. நான் தலையிலை அடிச்சு அழத் தொடங்கியிட்டன். அவை என்னை அழவேண்டாமெண்டு திருப்பித் திருப்பிச் சொல்லுகினம். ஆனால் என்னாலை நிறுத்த முடியவில்லை. போனை வெச்சிட்டுத் தங்களுக்குள்ளை குசுகுசு வென்டு கதைக்கினம். தம்பி என்னவெண்டு சொல்லுங்கோவன் என்டு கேட்கிறன். யாரும் எதுவும் சொல்லயில்லை. ஏதோ கூடாமல் நடந்திட்டுதெண்டுதான் நினைக்கிறன். வெளியிலை ஏதோ சத்தம். எட்டிப் பார்த்தன். பொலிஸ் வண்டி வந்து வீட்டுக்கு முன்னாலை நிண்ட சத்தம்தான். எனக்கு விளங்கியிட்டுது. நான் ஏங்கிப்போய் அப்படியே இருந்திட்டன்.

**ஜீவநதி- 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சாமானியனின் அழுகை

நான் விக்கிவிக்கி அழுதேன். என்னவோ தெரியவில்லை. நான் இப்போ எல்லாவற்றிற்கும் அழுகிறேன். என்னோடு எப்போதும் அன்பாக இருக்கும் நெருக்கமான என் நண்பன் என்னையிட்டுக் குழம்பி இருந்தான். என்னுடைய அழுகை அவனுக்கு வியப்பைக் கொடுத்தது. எவையெல்லாம் என் மனதை உறுத்துகிறதோ அதற்காக நான் அழுகிறேன். வீதியில் நடந்து செல்லும்போது சூழ்நிலையை மறந்து அழுகிறேன். என்னால் எதையுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து போக முடியவில்லை. அது எனக்குச் சம்பந்தமில்லாத ஒன்று என ஒதுங்கிப் போக முடியவில்லை. என்னைக் கோழையென்று பலர் கூறியதையும் செவிமடுத்திருக்கிறேன்.

ஒரு நாள் வீதியால் நடந்து கொண்டிருந்தபோது ஒரு ஆசிய நாட்டவனை நையப் புடைத்துக் கொண்டிருந்தார்கள். அடித்தவர்கள் இங்கிலாந்து நாட்டவர்கள். ஆசிய நாட்டவர்கள் தங்கள் நாட்டில் வந்து தங்களின் தொழில் வாய்ப்புகளை அபகரிக்கிறார்கள் என்ற ஆதங்கம். அந்த ஆதங்கம் வன்முறையாக மாறிவிடுகிறது. இதனால் ஆசிய நாட்டவர்களைக் காணும்போது கோபம் கொண்டு அவர்களைத் தாக்குகிறார்கள். இதனைக் கண்டபோது அந்த இடத்திலேயே அழுதேன். என் அழுகை அந்தச் சூழ்நிலையில் தாக்கத்தை இன்னும் அதிகரித்தது. அவனை விட்டுவிட்டு என்னை வந்து அடித்தார்கள். அடியை வாங்கிக் கொண்டும் அழுதேன். ஏன் அழுகிறேன்? பிரச்சினைகள் எங்குதான் இல்லை.

லண்டன் நாட்டைச் சேர்ந்த ஒருவன் வீதியோரமாகக் கிழிந்த உடையுடன் படுத்திருப்பதைப் பார்த்து அழத் தொடங்கிவிட்டேன். சொந்த நாட்டைச் சேர்ந்தவன் படுக்க இடமின்றி உண்ண உணவின்றி இருக்கும் போது அகதியாக வந்து எல்லாம் கிடைத்து நான் வாழ்வதை என்னால் தாங்க முடியவில்லை. பிழை எங்கே என்று எனக்குப் புரியவில்லை. மனதை அந்தக் காட்சி காயப்படுத்தியது. இப்படியான காட்சிகள் வெள்ளைத் தோல் கொண்டவர்களுக்கு ஒருவித ஆத்திரத்தை உண்டு பண்ணுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வன் முறையாக வெடித்துச் சிலவேளைகளில் கொலையிலும் முடிந்து விடுகிறது. நான் அழுவதையும் அடிவாங்கியதையும் பார்த்த வீதியால் சென்று கொண்டிருந்த தமிழர் ஒருவர் என் மேல் பச்சாதாபப்பட்டு எனக்கு ஏதோ நடந்துவிட்டதாக நினைத்து " தம்பி ஏன் அழுகிறீர். என்ன நடந்தது ." என்று கேட்டு என்னைக் கட்டிப் பிடித்து ஆசுவாசப்படுத்தினார். நான் அழுததற்கான காரணத்தைச் சொன்னதும் என் மேல் கோபங்கொண்டு என்னைத் தள்ளி விழுத்திவிட்டுப் பேசிக் கொண்டு போனார். ஏன் பேசினார்? நான் அழுதபடி நடந்து கொண்டிருந்தேன். அழுகை என்பது இயல்பாக மனிதனோடு பிறந்த ஒன்று. மனிதர்கள் அதனைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து குறிப்பிட்ட சிலவிடயங்களுக்கு மட்டும்தான் அழ வேண்டும் என்று சட்டமியற்றிவிட்டார்கள். அதனால் நான் அழும்போது குழம்பிப்போய் என்மீது கோபம் கொள்கிறார்கள். அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத விடயங்களுக்கு நான் அழுவதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களைப் பார்க்க எனக்கு வியப்பாக இருக்கிறது.

அப்படியே போய்க் கொண்டிருக்கும் போது ஒரு இளைஞன் வயது போன ஒருவரிடம் அவர் சட்டைப் பையிலிருந்து நாசூக்காக பர்சைக் களவாடியதைக் கண்டு தாங்கமுடியாமல் அழத் தொடங்கிவிட்டேன். அந்த வழியால் வந்த ஒரு ஆங்கிலேயர் என் மேல் இரக்கப்பட்டு என் முதுகில் தட்டி அழுவதற்கான காரணத்தைக் கேட்க நான் காரணத்தைக் கூறினேன். அவர் வியப்போடும் கோபத்தோடும் என்னைப் பார்த்துவிட்டுப் பேசாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டார்.

வரும் வழியில் ஆலயத்திற்குள் செல்கிறேன். சுகந்தம் நிறைந்த ஊதுபத்தி தன் நறுமணத்தை ஆலயத்துள் பரப்பிக் கொண்டிருந்தது. அர்ச்சகர் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார். கடவுளுக்கு நைவேத்தியமாகப் பலவித உணவு வகைகளைப் படைத்திருந்தனர். கடவுளுக்குப் பால் அபிஸேகம் நடந்து கொண்டிருந்தது. நான் பலத்து அழத் தொடங்கி விட்டேன். எல்லோரும் திகைத்துப் போய் என்னை நோக்கி ஓடி வந்தனர். எனக்கு ஏதோ நடந்து விட்டதெனக் கருதிக் குழம்பிப் போயிருந்தனர். என்ன…என்ன என்று கேட்டார்கள். “கடவுளுக்கு முன்னாலை இருக்கிற உணவிலை அரைவாசியை இல்லாதவங்களுக்குக் கொடுக்கலாமே. கடவுளுக்குமேலை ஊத்திற பாலை இல்லாத குழந்தைகளுக்குக் குடுக்கலாமே.” என்று கூறிக் கூறிக் கத்தி அழுதேன். நான் கூறியதைக் கேட்டதும் அங்கு நின்றவர்களுக்குக் கோபம் உச்சத்துக்குச் செல்கிறது. என்னைக் கொறகொறவென்று இழுத்துவந்து றோட்டில் போட்டு விட்டுப் போய்விட்டார்கள். துன்பம் எங்கு நடந்தாலும் எனக்கு அழுகை வருகிறதே. நான் என்ன செய்வது? என்னை ஒரு கோமாளியாகப் பார்க்கிறார்கள். என்னுடைய அழுகையை ஒருவர் தன்னிலும் அர்த்தமுள்ளதாகக் கருதவில்லை.

கோயிலிலிருந்து தூக்கி எறியப்பட்ட நான் வேதனையோடு எழும்பி நடந்து செல்கிறேன். கால் போனபோக்கில் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறேன். நேராகச் சென்று வலது பக்க வீதிக்குள் இறங்கி எனது நண்பனின் வீட்டை நோக்கிச் செல்கிறேன். இடையில் ஒரு வீடு. அழுகைச் சத்தம் கேட்கிறது. சிறிது நின்று எட்டிப் பார்க்கிறேன். அவ் வீட்டு முதியவர் இறந்துவிட்டார். அழுகைச் சத்தம் எதுவும் இல்லை. பாவம் அந்த மனிதன். பல தடவை அந்தவீதியால் செல்லும்போது அவரோடு கதைத்திருக்கிறேன். அவருக்கு மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும். அவர் மனைவி இறந்து ஏழு வருடங்களாகிவிட்டது.

" அவள் சீமாட்டி என்னைத் தனிய விட்டுவிட்டுப் போய்ச் சேர்ந்திட்டாள்" என்று சொல்லிக் கவலைப்படுவார். மூன்று பிள்ளைகள் இருந்தும் அந்த வீட்டில் தனியனாக இருக்கிறார். அவருக்கு வயது எண்பது. அவருக்குப் பிள்ளைகளோடு போய் இருப்பதில் நாட்டமில்லை.

தன் மனைவியோடு வாழ்ந்த வாழ்க்கைபற்றி உணர்வு பூர்வமாகக் கூறிக் கவலைப்படுவார். சிலவேளைகளில் மனைவியைப்பற்றிப் பெருமையாகவும் கூறிக் கொள்வார். அவள் இல்லாமல் தன்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லையே என்று கூறிக் கலங்குவார். நான் ஆறுதல் கூறுவேன். அவருடைய அந்தப் பாசக் கதையைக் கேட்டதும் எனக்கு அழுகை வந்துவிட்டது. அழுகை வந்தால் நான் அடக்குவதில்லை. விம்மிவிம்மி அழுவேன். அந்த மனிதர் இன்று போய்விட்டார். சரி பழகியவராயிற்றே என்று உள்ளே செல்கிறேன். அவரின் உடல் அங்கில்லை. அங்கு அவரின் உறவினர்கள் நல்லாக உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்புகளைக் கதைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் வியப்போடு பார்த்தார்கள். நான் என்னை அவரின் நண்பர் என அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவர்களில் இருவர் என்னோடு வந்து கதைத்தார்கள். அவர்களில் ஒருவர் இறந்தவரின் மகன். இருவரும் நான் இறந்தவரோடு எவ்வளவு நெருக்கம்  என்பதை அறிவதில் முனைப்பாக இருந்தார்கள். அவரின் வைப்புகளைப் பற்றி அறியும் நோக்கமாகவும் இருக்கலாம். நானும் விட்டுக் கொடுக்காமல் கதைத்துக் கொண்டிருந்தேன். கடைசியாக தோலை உரித்துக் காட்டிவிட்டார்கள். " இந்த வீட்டைப் பற்றி ஏதும் உங்களோடு கதைத்தவரே " என்று கேட்டார்கள். நான் பதில் கூறாமல் அழத் தொடங்கிவிட்டேன். இந்த முறை அழும்போது ஒப்பாரியும் சொன்னேன்.

" உயிரிழந்து உத்தமன் கிடக்க..ஐயோ ..இங்கை உயில் கேட்டு உருளுறாங்களே  ... ஐயோ.. ஐயோ..தண்ணி கேட்டுப் புடலை மரம் நிக்க..ஐயோ புடலங்காய் நீளம் அளந்து பார்க்கிறாங்களே... ஐயோ..ஐயோ  " என்று நான் ஒப்பாரி சொல்லி அழ எனக்குப் பக்கத்தில் இருந்தவர்கள் தூரப்போய் விட்டார்கள். என்னைத் தூக்கி வெளியிலையும்  போடமுடியாது. ஏனென்றால் நான் அழுத இடம் செத்த வீடல்லவா?. அழ வேண்டியவர்கள் அவர்கள். ஆனால் நான் அழுது கொண்டிருக்கிறேன். இனி அங்கு நிற்பதில் பிரயோஜனம் இல்லை என்று நினைத்து நான் நண்பனின் வீடு நோக்கி தொடர்கிறேன். எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாகவே என் வீட்டார் கருதி விட்டார்கள். நான் வீட்டைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறத்தடை. ஒரு வைத்தியரிடம் என்னைக் கூட்டிச் சென்று காட்டினார்கள். அவரும் தான் படித்த படிப்பை முடிந்தளவுக்குப் பயன்படுத்தி வாய்க்குள் நுழைய முடியாத வருத்தம் ஒன்றின் பெயரைக் குறிப்பிட்டுச் சில குளிசைகளையும் கொடுத்து விட்டார். அவர் தான் என்னை வெளியில் விடவேண்டாமென ஆலோசனை கூறியிருந்தார். எனக்கு அன்றிலிருந்து வீட்டுச் சிறை. எனக்கு ஏற்படுத்தப்பட்ட வீட்டுச் சிறையிலிருந்து தப்பி இன்று காலையிலிருந்து அழுதபடியே நடந்து கொண்டிருக்கிறேன். இப்போ வீட்டில் ஒரே அமளிதுமளியாக இருக்கும். நான் நண்பன் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன். நான் ஏன் அழுகிறேன் என்பதை யாரும் புரிந்து கொள்ளவில்லை. என் உணர்வுகளின் நேர்மையான வெளிப்பாட்டை ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள் ? ஏன் எனக்குப் பைத்தியம் என நினைக்கிறார்கள்? எனக்கு என்னவோ செய்வதுபோல் இருக்கிறது. காலையில் இருந்து நான் எதுவும் சாப்பிடவில்லை. தலையைச் சுற்றுகிறது. நான் நிலத்தில் விழுவதாக மனம் சொல்கிறது. சிறிது நேரம் என் மனம் எனக்கு எந்த அறிவுறுத்தலையும் தரவில்லை. மயங்கிவிட்டேன் போலிருக்கிறது. கண் விழித்து பார்த்த பொழுது வீட்டில் படுத்திருக்கிறேன். என்ன நடந்ததென மனைவியிடம் கேட்டேன். நான் வீதியில் மயங்கிக் கிடந்ததாகவும். அதைப்பார்த்து யாரோ அம்புலன்சிக்கு அடித்தாகவும் பிறகு வைத்தியசாலை தங்களுக்குத் தெரியப்படுத்தியதாகவும் சொல்லி முடித்தாள் என் மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவற்றையும் சொல்லிவிட்டு என்னைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் என் மனைவி.

என் செயல்களால் அவள் காயப்பட்டுள்ளாள் என்பது புரிந்தது. அவளுடைய கண்கள் எங்கள் குடும்பத்துக்காக அழ மாட்டீர்களா என்று கேட்பது போலிருந்தது . மனசு ஏதோ சொன்னது. கண்ணை மூடிக் கொண்டேன்.

**ஜீவநதி- 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு கடிதங்களும் நண்பனும்

நேற்றுத்தான் லண்டனுக்கு வந்தது போல் இருக்கிறது. முப்பது வருடங்கள் ஆகிவிட்டது. நேற்று அப்பாவும் அம்மாவும் கடிதம் எழுதியிருந்தார்கள். பேரப்பிள்ளைகளைப் பார்க்க ஆசையாக உள்ளதாகவும் ஒருதடவை வந்து போகும்படியும் கேட்டிருந்தார்கள். இயந்திரமயமான இந்த லண்டன் நகரத்தில் வேலை செய்து நானும் என் மனைவியும் நிசமாகவே மனதளவில் களைத்துப் போய்விட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாறுதலுக்காக கொழும்புக்குச் செல்வதெனத் தீர்மானித்து அதற்கான தயாரிப்புகளை ஆரம்பித்தோம்.

வேலைக்கு விடுமுறை ஒழுங்கு செய்வதிலும் விமானப் பயணச் சீட்டு ஒழுங்கு செய்வதிலும் இரு நாட்கள் போய்விட்டன. நாளும் நேரமும் குறித்தபின் அப்பாவுக்கு எடுத்துச் சொன்னேன். அப்பாவும் சந்தோசப்பட்டார்.

அந்த நாளும் வந்தது. பிள்ளைகளுடன் விமானத்தில் ஏறிக் கொண்டோம்.

நான் படிக்கும் காலத்தில் என்னோடு பழகிய நண்பன் துரையையும் சென்று பார்க்கவேண்டும் என மனதுள் நினைத்துக் கொண்டேன்.

கொழும்பில் வந்திறங்கிப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு வெளியேவந்து எங்களுக்காகக் காத்து நின்ற வாகனத்தில் ஏறி வீடு வந்து சேர்ந்தோம்.

அதே வீடு. நான் கொழும்பில் இருக்கும்போது வாழ்ந்த வீடுதான் அது.

அப்பா அம்மாவுக்கு மிகுந்த சந்தோசம். மகிழ்வோடு கட்டித்தழுவி தாங்கள் சந்தோசத்தை வெளிப்படுத்தினார்கள்.

அடுத்தநாள் வீட்டின் முன்பகுதியிலிருந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். அப்போது அப்பா ஒரு பெட்டியைக் கொண்டுவந்து தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு காலமாக அப்பா இதைக் கட்டிக் காத்திருக்கிறார்.

அதனை வாங்கித் திறந்தேன்.

அதனுள் நான்கு கடிதங்களும் வேறு சில பொருட்களும் இருந்தன.

இக் கடிதங்கள் 1974 ஆம் ஆண்டு என் நண்பன் எழுதியது. அப்போதைய விடயங்கள் பலவற்றை உள்ளடக்கிய கடிதம்.

நான் இலங்கையில் இருந்த காலத்தில் வந்த கடிதங்கள் இரண்டு மற்றைய கடிதங்கள் நான் லண்டனுக்கு வந்தபின் வந்த கடிதங்கள். ஒரு சின்ன அறிமுகம் என் நண்பனைப்பற்றித் தரலாமென்று நினைக்கிறேன்.

அவனின் பெயர் துரை. முழுப்பெயர் துரைசிங்கம். நாம் இருவரும் ஒரே வகுப்பில்தான் படித்தோம். இருவரும் எப்போதும் மாவோசேதுங்கின் சிந்தனை அடங்கிய ஒரு சிறிய புத்தகம் வைத்திருப்போம். இதுதான் எங்கள் அரசியல் பின்னணி.

தமிழினம் விடுதலைபெற ஆயுதப் போராட்டம் அவசியம் என்ற கருத்தோட்டம் நிலவிய காலம். கபொத உயர்தர வகுப்பில் சித்தி எய்துபவர்களைத் தரப்படுத்தல் என்னும் முறை மூலம் வஞ்சித்த காலம்.

துரை இது சம்பந்தமாக அறியும் ஆர்வம் கொண்டிருந்தான்.

நானும் துரையும் இடதுசாரிக் கருத்துகளோடு இருந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெரிதாக அரசியலில் ஈடுபடாவிட்டாலும் இடதுசாரிக் கருத்துகளை விரும்பியவனாக இருந்தேன்.

மேலே கூறியவை எனது நண்பனைப் பற்றியும் என்னைப் பற்றியும் கூறப்பட்ட ஆரம்பநிலைத் தகவல்களே. எங்கள் அரசியல் நிலைப்பாடுகள் எவ்வளவு காலம் நிலையாக இருந்தது என்பதும் அதற்கு விசுவாசமாக எவ்வளவு காலம் நகர்ந்தோம். எல்லாம் சொல்லப்படாத கதைகளே!

கடிதங்களைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் எல்லாவற்றையும்விட எனக்கு முக்கியமாகப்பட்டது. நான்கு கடிதங்களையும் எடுத்துக் கொண்டு அறைக்குச் சென்று படிக்கத் தொடங்கினேன்.

முதலாவது படித்தபோது அவன் மேல் மதிப்பும் என்மேல் வெறுப்பும் வந்தது. அரசியல் சூழ்நிலைகள் மாறத் தொடங்கிய காலத்தில் நான் வலுக்கட்டாயமாகக் கொழும்புக்கு என் தந்தையால் அழைத்து வரப்பட்டு விட்டேன். இந்தக் காலகட்டத்தில்தான் அவனது முதல் இரு கடிதங்களும் வந்திருந்தன.

அவன் நான் வந்தபின் தமிழ் மாணவர் பேரவையில் சேர்ந்து கொண்டதைப் பற்றி எழுதியிருந்தான்.

தரப்படுத்தல் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்ததைப்பற்றித் தாறுமாறாக எழுதியிருந்தான். அதன் பாதிப்புகளைப் பற்றித் தெளிவாக எழுதி அதற்கான போராட்டத்தைப் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி இருந்தான்.

அந்தப் போராட்டத்தில் தான் கலந்து கொண்டது பற்றியும் எழுதி இருந்தான்.

இந்தப் போராட்டங்கள் நடந்தபோது நான் கொழும்பில்தான் இருந்தேன். ஆனால் அவனுக்குப் பதில் எழுதும் தெம்பு இருக்கவில்லை. குற்றவுணர்வு என்னைக் குத்தியது. ஆனால் அவன் எந்தவொரு வரியிலும் நான் கொழும்பு வந்ததைக் குற்றமாக எழுதவில்லை. என்னைப் படிக்கும்படியும் அடிக்கடி தனக்குக் கடிதம் போடும்படியும் தான் கேட்டிருந்தான்.

" சரி..சரி கடிதம் வாசிச்சது காணும் .." என் மனைவி என்னை விரட்டிக் கொண்டிருந்தாள்.

மனது பாரமாக இருந்தது. அவன் இப்போ இருக்கிறானா இல்லையா என்றும் தெரியவில்லை.

அவனது இரண்டாவது கடிதம் ஒரு அரசியல் பிரமுகரின் கொலைபற்றியது. கடிதத்தில் 28-7-1975 என்றிருந்தது.

அவர் கொலை செய்யப்பட்ட விபரத்தை எழுதியவிதம் அவன் பக்கத்தில் நின்று பார்த்ததுபோல் இருந்தது. அதனை நியாயப்படுத்தியும் எழுதியிருந்தான்.

அப்போதும் நான் கொழும்பில்தான் இருந்தேன். அதற்கும் நான் பதில் எழுதவில்லை. எனக்கு என்னவோ அந்தச் செயற்பாடும் பிடிக்கவில்லை. தனிமனிதக் கொலைகள் சரியான பாதையாக எனக்குப்படவில்லை. தனிமனிதக் கொலைகளால் எதையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையமுடியாது எனப் பதில் எழுத விரும்பினேன். ஆனால் என்னவோ எழுதவில்லை.

வர்க்கப் போராட்டம் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்த அவன் எப்படி இந்த இனரீதியான போருக்குள் சென்றானென்பது எனக்குப் புரியவேயில்லை. அவன் தடம் புரண்டு விட்டானோ என்று எனக்குள் நினைத்தேன்.

அதற்கும் அவன் விளக்கம் எழுதியிருந்தான்.

இனங்களுக்கிடையேயான போராட்டம் கூர்மையடையத் தொடங்கி விட்டதென்றும் அது தீர்க்கப்பட்டாலொழிய வர்க்கப் போராட்டம் நிகழ முடியாது எனத் தீர்க்கமாக எழுதியிருந்தான்.

இது பற்றியும் அவனுக்கு எழுதவேண்டுமென நினைத்தேன். ஆனால் மௌனம் காத்தேன்.

வருடங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன .
இந்த இடைவெளியில் அவனிடமிருந்து எந்தக் கடிதமும் வரவில்லை. நானும் படிப்பிலும் வேலையிலும் கவனம் செலுத்தியமையால் நாட்டைப் பற்றிச் சிந்திக்க நேரம் இருக்கவில்லை. இவ்விடத்தில் இன்னுமொரு வலாற்று நிகழ்வைக் கூறவேண்டும்.

.......................................

நான் நினைக்கிறேன் 1983 ஆக இருக்கவேண்டும்.

திடீரென்று ஒரு நாள் நான் வேலைக்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தபோது பஸ்சினுள் நின்றவர்கள் என்னை ஒருவிதமாகப் பார்த்தார்கள். நான் வழக்கம்போல் எவ்வித ஐயப்பாடுமின்றி நின்றுகொண்டிருந்தேன். நான் இறங்குமிடம் வந்துவிட்டது. இறங்கிக் கொள்கிறேன்.

அவர்களின் பார்வைகளில் உள்ள வேறுபாட்டை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேகமாக என் வேலைத் தலத்தை நோக்கி நடக்கிறேன். மனதில் ஒருவித பயம்.
கலக்கமாக இருந்தது. நான் வேலை செய்த இடம் கூடுதலான சிங்களமக்கள் வாழுகின்ற இடம்.

நான் வேலைத்தலத்துள் நுழைந்து வடக்குப் பக்கமாக உள்ள பகுதியில் உள்ள எனது அறைக்குச் செல்லும் வழியில் எனது சக வேலையாள் கருணாரத்தின என்னைக் கண்டு நிறுத்தி அங்குமிங்கும் பார்த்து

" ஏன் வந்தனீ.. யாழ்ப்பாணத்திலை பதின்மூன்று ராணுவம் முடிஞ்சுதாம்..இனக் கலவரம் வரும்.. உடனே வீட்டை போ " என்று சிங்களத்தில் கூறுகிறார். இவருக்கு இது எப்படித் தெரியும் என எனக்கு ஆச்சரியமாகவும் பயமாகவும் இருந்தது.

யோசித்துக் கொண்டே என்னுடைய அறைக்குச் செல்கிறேன். எனக்குப் பொறுப்பாக இருந்தவர் ஒரு தமிழர்.

நான் வந்ததைக் கவனித்த அவர் மெதுவாக எழுந்து என் மேசைக்கருகில் வந்து கருணாரத்தின சொன்ன அதே விடயத்தைக் கூறிவிட்டு அமர்ந்து விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ நான் என்னைச் சுதாகரித்துக் கொண்டேன்.

மெதுவாக எழுந்து வெளியே போகிறேன். அவர் என்னைக் கடைக்கண்ணால் பார்ப்பதும் புரிகிறது. ஒரே வேகத்தில் வெளியே வந்து குறுக்கு வீதியில் இறங்கிப் பிரதான வீதிக்கு வந்து பஸ் நிலையத்தில் காத்து நிற்கிறேன். இதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் பஸ் வந்தது. பஸ்சில் ஏறி ஒரு பக்கத்தில் நின்று கொண்டேன். இருப்பதற்கு இடமில்லை. நின்றபடி மற்றவர்களை நோட்டம் விட்டேன். பெரும்பாலானவர் கைகளில் கொட்டன்களும் வாள்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கவனித்தேன்.

நான் நன்றாகப் பயந்திருந்தேன். என்னைத் தமிழன் என்று அடையாளம் கண்டு விடுவார்களோ என் மனதுக்குள் நடுங்கினேன். ஆயினும் தைரியமாக ஒரு சிங்களவன் போல் நின்று கொண்டிருந்தேன். யாரும் என்னைச் சந்தேகிக்கவில்லை. இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது. அன்றுதான் மிகப் பெரியதொரு இனக் கலவரம் அரங்கேறியது. இந்த நிகழ்வைத் தொடர்ந்து பல துன்பங்கள் அழிவுகள் 24 மணித்தியாலத்துக்குள் நடந்து முடிந்துவிட்டன. சொந்த நாட்டிலேயே தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டனர். நானும் என் குடும்பமும் ஒரு பாடசாலையில் அடிமைகளாக்கப்படுகின்றோம். காலம் யாருக்காகவும் காத்து நிற்பதில்லையே. 1984 நாட்டைவிட்டுப் புறப்படும் தீர்மானம் எடுக்கிறேன். இன்னுமொரு நாட்டில் அகதியாகக் கால் பதிக்கிறேன். அகதி வாழ்க்கை கோலாகலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகிறது. மனைவியையும் அகதியாகக் கூப்பிடுகிறேன். குடும்பமே அகதியாகிறது. காலம் வேகமாக ஓடுகிறது. அகதியாகப் புகுந்த நாட்டில் அந்த நாட்டின் குடியுரிமை கிடைக்கிறது. பணக்கார வாழ்க்கை அந்நியனின் பணத்தில் ஆரம்பமாகிறது. நான் பிறந்த நாடு இவ்விடைவெளியில் பல அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. 2009 இல் கடும் யுத்தம் நடக்கிறது. பல நாடுகளின் உதவியுடன் விடுதலை இயக்கத்துக்கு எதிரான யுத்தம் விஸ்வரூபமெடுக்கிறது. போராட்டம் மௌனமாகிறது. சூட்டுச் சத்தங்கள் ஓய்கின்றன. ஏராளமான மக்களும் போராளிகளும் இறந்து விடுகிறார்கள்.

2011 ஆரம்பமாகிறது. அகதிகளாக வந்து குடியுரிமை பெற்றவர்கள் குதூகலமாக எந்த நாட்டிலிருந்து கலைக்கப்பட்டார்களோ அந்த நாட்டிற்குச் செல்கிறார்கள். ஆடம்பரமான அவர்களின் வருகையும் அவர்களின் ஆர்ப்பாட்டமான கதைகளும் நாட்டில் துன்பத்தில் உழன்று கொண்டிருந்த மக்களை மேலும் துயரப்படுத்துகிறது.

யாரும் அதையிட்டுக் கவலைப்படுவதில்லை. தாங்கள் செய்யும் தொழில்களை மறைத்து உயர்ந்த தொழில்களாகச் சொல்லித் தாங்கள் ஒரு மாதத்தில் லட்சக்கணக்காகச் சம்பாதிப்பதாகக் கூறி அங்குள்ளவர்களைப் பிரமிப்பில் ஆழ்த்துகிறார்கள்.

வருடங்கள் நகர்கின்றன.

2012, 2013 களில் தங்கள் நாட்டுக்குச் சென்று வந்தவர்கள் தாங்கள் அகதிகளாக வாழும் நாட்டில் இலங்கையில் ஒரு பிரச்சினையும் இல்லை எல்லாப் பிரச்சினைகளுக்கும் விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிகளே காரணம் என்ற தங்கள் அரைகுறைப் புரிவுகளை வெளிப்படுத்துகிறார்கள். போராட்டத்தில் முப்பது வருடங்களாகச் செய்த தியாகங்களை எல்லாம் கொச்சைப்படுத்துகிறார்கள். போராடிக் களைத்தவர்களைத் துரும்பாகப் பார்த்து ஏளனமாகப் பார்க்கும் விடயங்களும் அரங்கேறுகின்றன. காலம் நகர்ந்து கொண்டிருக்கிறது.

..........................................

என் நினைவுகள் மனைவியின் குரலால் தடைப்பட எழுந்து வெளியே செல்கிறேன். என் மனைவிக்கு நான் கடிதங்களோடு நேரத்தைச் செலவு செய்வது பிடிக்கவில்லை. இரு கடிதங்கள் திறக்கப்படாமலே உள்ளன. அவற்றை எப்படியும் இன்று பார்க்கவேண்டுமென மனம் அவசரப்படுகிறது.

மதிய உணவு அருந்தியபின் அறைக்குள் சென்று அமைதியாகத் திறக்கிறேன். அந்தக் கடிதம் 2002 ஆம் ஆண்டு வந்திருந்தது.

வழக்கமாகத் தோழர் என்று ஆரம்பிக்கும் அவன் நண்ப என எழுதியிருந்தான். முழுக்கடிதத்தையும் நான் படிக்க விரும்பவில்லை.

அந்தக் கடிதத்தில் தான் இயக்கம் ஒன்றில் சேர்ந்துவிட்டதாகவும் போருக்கான பயிற்சிகள் பெற்றுத் தளபதிப் பொறுப்பில் உள்ளதாகவும் கூறியிருந்தான். அவன் மிகக் கவலையோடு நடந்த சகோதர இயக்கக் கொலைகள் பற்றி விபரித்திருந்தான். தனக்கு விருப்பமில்லாமலே கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிதாயிற்று எனக் குறிப்பிட்டிருந்தான். அவனுடைய கடிதத்தில் சிலவரிகள் நீரால் கலங்கி இருந்தன. சிலவேளை மேற்குறிப்பிட்ட வரிகளை எழுதும்போது கண்ணீர் விட்டானோ என்னவோ! தொடர்ந்து தன் தலைமையில் நடைபெற்ற தாக்குதல்கள் பற்றியும் எழுதியிருந்தான். அக்கடிதங்களை வாசித்த பின் சிறிது நேரம் அமைதியாக இருந்தேன். மனதுக்குள் ஏதோ செய்தது. நேரத்தைப் பார்த்தேன் மாலை ஆறுமணியாக இருந்தது. கடிதத்தின் தாக்கத்தை மறைக்க வெளியில் சென்று மற்றவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். என்னதான் வாய் கதைத்தாலும் மனம் மட்டும் நான்காவது கடிதம் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது.

இரவு உணவை முடிக்கும்போது நேரம் 9 ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. சாப்பாடு முடித்த கையோடு அறைக்குள் வந்துவிட்டேன். அவசர அவசரமாக நாலாவது கடிதத்தை உடைத்துப் பார்க்கிறேன். அது 2009 காலகட்டத்தில் எழுதப்பட்டிருந்தது. விடுதலைப் போர் மௌனிக்கப்பட்ட காலம். நண்பா, சரியோ பிழையோ போராட்டம் மௌனிக்கப்பட்டுவிட்டது. பல பிரேதங்கள் ஆங்காங்கு சிதறப்பட்டு கிடக்கின்றன. நாங்கள் மக்களோடு சென்று எதிரியிடம் சரணடைந்துவிட்டோம். எந்த மண்ணைக் காக்கப் போராடினோமோ அதை எதிரியிடம் கொடுத்து விட்டு அடிமைகளாக எதிரிகளிடம் சரணடைந்து விட்டோம். எங்களுக்கு என்ன நடக்கும் என்பது தெரியவில்லை. எனது கைகளில் பலத்த காயம். நான் உயிரோடு விடப்படுவேனா கொல்லப்படுவேனோ தெரியவில்லை. நீ எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கு வந்தால் என்னை வந்து பார். உயிரோடிருந்தால் சந்திப்போம் என எழுதியிருந்தான் மனக்கலக்கத்தோடு கடிதத்தைப் பிடித்தபடி பேசாமல் இருந்தேன். மறுநாள் யாழ்ப்பாணம் போவதென்பது எங்கள் திட்டமாகவிருந்தது. எப்படியும் துரை வீட்டுக்குப் போவதென மனதிற்குள் நினைத்துக் கொண்டேன். துரையும் எனது ஊரவன்தான். காலையில் புறப்பட்டு மாலையில் போய்ச் சேர்ந்தோம். அண்ணளவாக 3 மணியாக இருக்கும். வீட்டுக்குப் போய் சிறிது நேரம் இருந்துவிட்டு வெளியில் போயிட்டு வாறன் என்று சொல்லிப் புறப்பட எனது பெரியம்மா,

" தம்பி.. உன்னோடை படிச்ச துரை நேற்று மோசம் போயிட்டான்..அவன் இயக்கத்திலை இருந்தவன்..கடைசிச் சண்டையிலை சரியான காயம் ..இரண்டு வருசத்துக்கு முந்தித்தான் காம்பிலையிருந்து விட்டவங்கள்..வந்து பரவாயில்லாமல் மருந்தெடுத்துக் கொண்டிருந்தவன். திடீரென்டு நேற்று வலிப்பு வந்து செத்துப்போனான். அவனை ஊரிலை யாரும் மதிக்கேல்லைத் தம்பி. சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருந்தவன். தன்ரை நிலையை உனக்கு எழுதக் கூடாது என்று சத்தியம் வாங்கியிட்டான். அவன் கலியாணமும் கட்டேல்லை. பாவம் அநாதரவாய் இருந்து செத்துப்போனான்."

நான் ஏங்கிப்போய் அப்படியே நின்றுவிட்டேன்.

**தாயகம்- 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரட்டுக் கௌரவம்

லண்டனிலுள்ள ஈஸ்ட்காம் பகுதியில்தான் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். 1983 இனக்கலவரத்திற்குப் பின் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அகதிகளாக வந்தவர்களே இக் குடும்பத்தினர்.

அவர்கள் வந்து இப்போ பத்து வருடங்களாகிவிட்டது.
இங்கிலாந்து இவர்களை தன் பிரசைகளாக ஏற்றுக் கொண்டு மூன்று வருடங்கள்தான் ஆகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ அவர்கள் நிலை மாறிவிட்டது. பணம் அவர்களிடம் தாராளமாகப் புழங்கத் தொடங்கிவிட்டது.

இப்போ ஈஸ்ட்காமில் இருப்பது அவர்களுக்கு மரியாதைக் குறைவாகவும் படத் தொடங்கிவிட்டது.

இவர்களுக்கு மட்டுமல்ல இவர்களைப்போல் பலருக்கு ஈஸ்ட்காம் ஒரு தீண்டத்தகாத நகரம்.

இவர்கள் ஈஸ்ட்காமில் இருக்கிறோம் என்று யாருக்கும் சொல்லமாட்டார்கள். பதிலாக அதற்கு அருகிலுள்ள நகரமாகிய ரெட்பிறிஜ் என்று கூறுவார்கள். இத்தனைக்கும் ஈஸ்ட்காம் எல்லா வசதிகளும் நிறைந்த ஒரு நகரம். இங்கு நிற்கும்போது யாழ்ப்பாணத்தில் அல்லது இந்தியாவில் நிற்பதுபோன்ற பிரமை ஏற்படும். கோயில்கள் உள்ளன. தமிழர்களால் நடாத்தப்படும் பல கடைகளுள்ளன. சென்னையில் உள்ள எல்லா ஹோட்டல்களும் இங்கும் உள்ளன. எல்லாவிதத்திலும் வசதிகள் நிறைந்த ஒரு நகரம்.

ஆனால் இங்கு வசிப்பது தரக் குறைவென்று நினைக்கின்ற தமிழர்கள்தான் கூடுதலாக உள்ளனர். அதேநேரம் லண்டனுக்கு வந்த காலத்திலிருந்து இன்றுவரை சந்தோசமாக இங்கு வாழ்பவர்களும் பலர் உண்டு.

மேலே குறிப்பிட்ட அந்தக் குடும்பத்தின் தலைவர் ஏகாம்பரம். யாழ்ப்பாணத்தில் அச்சுவேலிப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர். கொஞ்சம் சண்டித்தனத் தன்மை கொண்டவர். எடுத்ததற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபங் கொண்டு கை ஓங்குவார். அவரின் கை பதம் பார்த்த புண்ணிய உடம்பு அவரின் மனைவியுடையது.

மனைவியின் பெயர் பர்வதம். அழுகி. காந்தக் கண்கள். நெல்லியடிப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர். ஏகாம்பரம் நெல்லியடியில் வியாபாரத்திற்குப் புகையிலை வாங்க வந்தபோது பர்வதத்தின் காந்தக் கண்களால் கவரப்பட்டுக் கல்யாணம் பண்ணியவர்.

இவர்களுக்கு நான்கு பிள்ளைகள். இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும். இரண்டு ஆண்களும் ஊரிலும் இரண்டு பெண்களும் லண்டனிலும் பிறந்திருந்தார்கள்.

இவர்களின் பிள்ளைகளில் ஒருவர் வைத்தியப்படிப்புக்கு தெரிவாகிவிட்டார். இதனால் ஏகாம்பரத்துக்கு ஏகப்பட்ட பெருமை. அவர் வீதியால் போகும்போது தன்னைச் சுட்டிக்காட்டிப் பலர் கதைப்பதுபோல் நினைத்துக் கொள்வார்.

உண்மையில் அப்படி யாரும் கதைப்பதில்லை.

தமிழர்களைப் பொறுத்தவரை வைத்தியத்துறைக்கு பிள்ளை செல்வது பெருமைக்குரிய ஒரு விடயமாகவே பார்க்கப்படுகிறது. இதற்கு ஏகாம்பரம் ஒன்றும் விலக்கல்லவே.

அவரின் அடுத்தமகன் ஒன்பதாந்தரத்திலும் மகள்கள் ஏழாம் ஐந்தாம் தரங்களிலும் படிக்கிறார்கள்.

பிள்ளைகளின் கௌரவத்திற்காக தான் ரெட்பிறிஜ் பகுதிக்குச் செல்லவேண்டுமென எண்ணத் தொடங்கிப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களாகிவிட்டன.

அதற்கான ஆயத்தங்களில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.

வீடு வாங்குவது சுலபமான காரியமல்ல. ஏகாம்பரம் எதிர்பார்க்கிற இடத்தில் வீடு வாங்குவதாயின் பணம் அதிகமாகத் தேவைப்படும். பத்து வருடங்கள் இந்த நாட்டில் இருந்தாலும் அவர் இப்போ இருப்பது வாடகைவீடே. களவாக ஒரு கடையில் வேலை செய்து கொண்டு வீட்டு வாடகையை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் தான் கௌரமான உயர்குடியைச் சேர்ந்த கனவானாகக் காட்டிக் கொள்வார். களவாக வேலை செய்வதால் வீடு வாங்க முடியாதென்பது அவருக்குத் தெரியும்.

ஒரு எதிர்கால வைத்தியரின் அப்பா எப்படி வாடகை வீட்டில் இருக்கலாம் என்று தனக்குள்தானே கேட்டுக் கொள்வார்.

பணம் கொடுத்து வீடு வாங்குவதற்கான வசதி செய்யும் பலரை அணுகிப் பார்த்தார்.

யாருமே களவாக வேலை செய்பவருக்கு கடன் தர எந்த வங்கியும் சம்மதிக்காது என்று கூறிவிட்டார்கள்.

அவர் பார்க்கும் இடத்தில் வீடுகள் அவருடைய வசதிக்கு மேலேதான் உள்ளது.

தான் வேலை செய்யும் இடத்தில் வேலை செய்வதாகக் கடிதம் தரமுடியுமா என்று கேட்டுப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஏனண்ணை நம்பரைக் குடுத்து வேலை செய்யுங்கோவன்" என்று அறிவுரைதான் பகன்றார்கள்.

" இஞ்சரப்பா நம்பரைக் குடுத்து வேலை செய்தால் கவுன்சில்காரன் காசு தரானெல்லே" என்று அவரின் மனைவிவேறு துளைத்தாள்.

" வேலை செய்தால் சம்பளம் வருந்தானே" என்று ஏகம்பரத்தார் கூற .

" உங்கடை பிச்சைச் சம்பளத்தை வைச்சு என்ன செய்யிறது. ஏதோ டாக்குத்தர் என்ட நினைப்பு." என்ற அவளின் கதை அவரைத் தைத்துவிட்டது.

பாய்ந்து சென்று அவளின் தலைமயிரைப் பிடித்துத் தன் வலக்கையின் ஐந்து விரல்களையும் கன்னத்தில் பதித்தார்.

அவள் கத்தி அழுதாள்.

பிள்ளைகளில் ஒருத்தி வந்து

" இனிமல் அம்மாவுக்கு அடிச்சால் பொலிசுக்குச் சொல்லுவன்" என்று  கூறியதும் ஏகாம்பரத்தார் தன்னை அடக்கிக் கொண்டார்.

ஏகாம்பரத்தார் நிலைகுலைந்து போனார். பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகள் இப்போ உரத்துக் கதைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அவருடைய மனைவி சொன்னது நியாயமானதே. அவருக்கு அதிகமான சம்பளம் இல்லை. அந்தச் சம்பளம் வாழ்க்கைக்குக் காணாது என்பது உண்மையே. இந்த உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய இதயத்துக்குப் புரியும். ஆனால் ஆண் என்ற நிலையில் தன் இயலாமையை அவள் சுட்டிக் காட்டியபோது அவரால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அதே நேரம் ஒரு வைத்தியரின் அப்பா ஈஸ்ட்காமில் இருப்பதும் வாடகை வீட்டில் இருப்பதும் நிரம்ப அவமானமான ஒன்று என்றே நினைத்தார். எல்லாவற்றையும் புறந்தள்ளி இதுவே முன்னுக்குவந்து அவரைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது.

இதற்காக அவர் எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருந்தார்.

இவருடைய இந்தத் தவிப்பை அறிந்து கொண்ட ஒரு ஏஜன்சி தனக்குச் சாதகமாக இவரை உபயோகப்படுத்தத் திட்டமிட்டது.

அவராகத் தங்களிடம் வருவதற்கான வழிகளை உருவாக்கினார்கள்.

மான் வலையில் விழுந்து கொண்டது.

ஏகாம்பரத்தார் அவர்களுடைய அலுவலகத்துக்குச் சென்றார்.

அங்கிருந்தவர் மிக அழகாகக் கதைத்து தங்கள் மேல் ஏகாம்பரத்தாருக்கு நம்பிக்கை வரச்செய்தார்.

புலி மானைப் பிடித்துக் கொண்டது.

இப்போ ஏகாம்பரத்தார் அவர்கள் கூறுகின்ற எல்லாவற்றுக்கும் தலையாட்டத் தொடங்கினார்.

ஏகாம்பரத்தார் ஒரு இடத்தில் வேலை செய்வதற்கான கடிதத்தையும் அதற்குத் தேவையான சகல கடிதங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் தயாரிப்பதாகக் கூறினார்கள்.

ஏகாம்பரத்தார் முற்பணத்தை மட்டும் திரட்டவேண்டும் என்றும் கூறப்பட்டது.

" தம்பி இந்தப் போலிக் கடிதங்களை வங்கி ஏற்றுக் கொள்ளுமா?" என்று ஏகாம்பரத்தார் கேட்டார்.

இடைக்கிடை அவரது சொந்த மூளை விழித்துக்

கொள்ளும் .

ஆனால் விழித்த வேகத்திலேயே அடங்கியும் விடும்.

" அண்ணை போனகிழமையும் ஒரு வீட்டு லோன் முடிச்சுக் கொடுத்தனாங்கள். " என்று அவர்கள் கூறியதும் ஏகாம்பரத்தார் பூரண திருப்தி அடைந்துவிட்டார்.

இனிமேல்தான் முக்கியமான விடயம் ஆரம்பமாகவுள்ளது.

" சரி அண்ணை இவ்வளவும் முடிச்சுத்தர பத்தாயிரம் பவுண் நீங்கள் தரவேண்டும். முதலிலை 5000 பவுணும் எல்லாம் முடிஞ்ச பிறகு 5000 பவுணும் தரவேணும்" என்று அவர்கள் சொன்னதும்

" நான் ஒருக்கா வீட்டிலை கதைச்சுப் போட்டு வாறன்" என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

வீட்டுக்கு வந்த ஏகாம்பரத்தாருக்கு எப்படி ஆரம்பிக்கிறதென்று தெரியவில்லை.

யாரோடும் கதைக்காமல் பேசாமலிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய நிலையைப் பார்த்த மனைவி

" என்னப்பா என்ன நடந்தது? பேசாமலிருக்கிறியள்."

" இல்லையப்பா. இண்டைக்கு ஒரு பார்ட்டியைச் சந்திச்சனான். .." என்று தொடங்கி நடந்தெல்லாவற்றையும் மனைவிக்குக் கூறினார்.

மனைவி ஏங்கிப் போய்விட்டாள். அவளின் உள் மனம் ஏதோ பெரிய பிரச்சினையில் அகப்படப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தது.

" எனக்கெண்டால் இது ஏமாற்றுப் போலப் படுகுது" என்று சொன்னாள்.

" உமக்கு எல்லாத்தையும் சந்தேகமாகப் பார்க்கிறதுதான் வேலை. அவங்கள் ஏமாத்திறதெண்டால் முதல் 5000 தானே கேட்கிறான். முழுசையும் கேட்கயில்லைத்தானே. போன கிழமைதான் வேறை ஒரு ஆளுக்குச் செய்து குடுத்தவங்களாம்."

கம்பீரமாகத் தானொன்றும் ஏமாறிற பேர்வழியில்லை எனச் சொல்லி நிமிர்ந்து பார்த்தார்.

' இந்த மனிசன் விடப்போறதில்லை. படப் போறது அவர் தானே'

என்று மனதிற்குள் நினைத்தபடி அவள் ஏதும் கதைக்காமல் சமையலறைக்குள் சென்றுவிட்டாள்.

தன் மனைவியின் வாயை அடைத்து வைத்த திமிரில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்து மறைத்து வைத்த 5000 பவுண்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டார்.

பணம் பரிமாறப்பட்டு விட்டது. பணத்தைப் பெற்றுக் கொண்டதற்கான எவ்வித ரசீதும் தரப்படவில்லை. ஏகாம்பரத்தார் கேட்டார். அவர்கள் இவர் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணம் ஒன்றைக் கூறி தட்டிக் கழித்துவிட்டார்கள்.

ஒரு கிழமை காத்திருக்கும் படியும் கேட்டுக் கொண்டார்கள். அவர் பார்த்த வீடு அவருக்குக் கிடைக்கப் போகுதென்ற சந்தோசத்தில் வெளியே வந்து வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

வழியில் அவருடைய நண்பரைக் கண்டதும் தன்னுடைய பெருமையைச் சொல்லி மகிழ அவர் மனம் விரும்பியது.

நண்பரை மறித்துத் தான் வீடு வாங்குவதற்கு ஒழுங்கு செய்ததைப்பற்றிக் கூறினார்.

" ஆரிட்டை ஒழுங்கு செய்தனீர்?" என்று நண்பர் கேட்க அந்த இடத்தின் பெயரைக் கூறினார்.

" அடக் கடவுளே அவங்களிட்டையே போனனீர். அவ்வளவுதான். அவங்கள் படு ஏமாத்துக் காரரப்பா." என்று அவர் நண்பர் கூற ஏகாம்பரத்தார் நம்பவேயில்லை.

ஏகாம்பரத்தாரைப் பொறுத்தவரை அவர் எரிச்சலிலை சொல்கிறார் என்பதே.

நாட்கள் நகர்கின்றன.

ஏகாம்பரத்தாரின் விடயம் எதுவும் நகரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியை அவர்கள் எடுப்பதில்லை.

நேரே போனால் சந்திக்க முடிவதில்லை. ஒரு நாள் நேரில் சந்திக்க முடிந்தபோது முன்புபோல் அவர்கள் கனிவாகக் கதைக்கவில்லை.

எரிந்து விழுந்தார்கள்.

ஏகாம்பரத்தார் இடிந்து போய்விட்டார். வீட்டுக்கும் சொல்ல முடியவில்லை.

எல்லாவற்றையும் தனக்குள்ளே புதைத்துக் கொண்டு குட்டிபோட்ட பூனையைப் போல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்.

ஒரு மாதமாகிவிட்டது.

அவர்கள் காரியாலயம் இப்போது திறக்கப்படுவதில்லை.

ஏகாம்பரத்திற்குப் புரிந்து விட்டது.

ஒரு நாள் வீட்டில் யாருமில்லை. தன்பாட்டில் இருந்து அழுதார்.

கத்தி அழுதார்.

பின்பு ஏதோ நினைத்தவராக அறைக்குள் சென்று கதவை இறுகச் சாத்தி உள்ளே தாழ்ப்பாளைப் போட்டார்.

**காற்றுவெளி- 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு காதலின் முடிவு

கணப்பொழுதில் முடிவை எடுத்துச் செயலாற்றிவிட்டாள். எவ்வளவு திறமைசாலி. நிர்வாகம் அவளையிட்டுப் பெருமை அடைந்தது. அந்த ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் அவளைப் பெருமையுடன் பார்த்தனர். அவள் மட்டும் ஒரு புன்னகையோடு கடந்துவிடுவாள். அவள் பெயர் மாதவி. அழகான முகம். கவர்ச்சியான புன்சிரிப்பு. அளவான உயரம். நீளமான கூந்தல். உடலுக்கேற்ற உடைகளை அழகாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்து கொள்வாள். மாதவி படிப்பில் படு சுட்டி. பாடசாலைக் காலங்களில் அவளே எல்லாப் பாடங்களிலும் முதன்மை பெறுவாள். சர்வ கலாசாலையில் முதற் பிரிவிலேயே சித்தி பெற்றாள். அவளையிட்டு அவளின் பெற்றோர் எப்பொழுதும் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். சர்வகலாசாலையில் படிக்கும் காலத்தில்தான் அவனைச் சந்தித்தாள். அவன் பெயர் முகுந்தன். அவளின் உயரத்திற்கு ஏற்ற பையன். ஓரலான முகம். ஆரம்பத்தில் இருவரும் நண்பர்களாகவே பழகினர். ஒரே பிரிவில் ஒரே துறையில் படித்ததால் படிப்பு சம்பந்தமாக இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர்.

முகுந்தன் மாதவியளவுக்குப் புத்திசாலியல்ல. அவனுக்கு மாதவியின் உதவி தேவையாக இருந்தது. மாதவி அவனுக்கு ஓர் ஆசிரியையாகவே செயற்பட்டாள்.

லண்டன் நகரத்தின் மத்தியில்தான் அவர்களின் கலாசாலையும் இருந்தது. இங்கிருந்து ஒரு மணித்தியாலம் புகையிரத வண்டியில் பயணம் செய்தால்தான் வீட்டினை அடைய முடியும்.

மாதவியின் வீட்டிலிருந்து மேலும் அரைமணி நேரம் பயணம் செய்தால் தான் முகுந்தனின் வீட்டையடைய முடியும்.

மாதவியின் அப்பா மிகச் சாதுவானவர். மாதவியின் அம்மா மிகுந்த கடவுள் பக்தி கொண்டவர். மற்றவர்கள் மனம் நோகும்படி அவர் கதைத்ததேயில்லை. மாதவிக்கு ஒரு அக்கா இருக்கிறாள். மிகமிக அமைதியானவள். தானுண்டு தன்பாடுண்டு என்று இருப்பவள். ஒரு அழகான சிறு குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகுந்தனின் அப்பா மிகவும் கடுமையானவர். தான் நினைத்ததைச் செயற்படுத்தும் பிடிவாத குணம் கொண்டவர். முகுந்தனுக்குப் பின் ஒரு தம்பியும் தங்கையும் இருக்கிறார்கள்.

முகுந்தனின் அப்பா தன் பிள்ளைகளின் மீது தன் விருப்பங்களைத் திணிப்பவர். முகுந்தனின் அம்மா கணவனைவிட வேகமானவள். கணவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு வாழ்வதுபோல் வாழும் ஒரு பெண். இப்படியான ஒரு பின்னணியில் முகுந்தனும் மாதவியும் நல்ல நண்பர்களாகப் பழகி வந்தனர். இந்தப் பழக்கத்தை சமூகம் தவறாகப் பார்க்கத் தொடங்கியது.

முகுந்தனின் அப்பாவுக்கு சாடைமாடையாக இவர்கள் இருவர்பற்றிச் சொல்வதும் அதனால் அவரின் கொதிப்பை ரசிப்பதிலும் சிலர் இன்பம் காணத் தொடங்கினர். முகுந்தனின் அப்பா நேரடியாகவே அவனிடம் கேட்டபோது நாங்கள் வெறும் நண்பர்கள் தானப்பா என்று முகுந்தனும் கள்ளம் கபடமின்றிக் கூறினான்.

ஒரு தடவை மாதவி யின் அப்பா அவளைக் கேட்டபோது 'We are just friends' என்று கூறியிருந்தாள்.

உண்மையும் அதுதான். முகுந்தன் அவளுக்கு ஒரு நண்பனாகவே தெரிந்தான். அதற்கு மேலால் அவனைப்பற்றிச் சிந்திக்க அவளால் முடியவில்லை.

முகுந்தன் எதிர் மறையாக இருந்தான். அவனுக்குள் ஒரு ஐயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மற்றவர்கள் சொல்வதுபோல் மாதவியைத் தான் நண்பனுக்கு மேலால் காதலிக்கிறேனோ என்ற சந்தேகமும் இருந்தது. ஏன் அப்படி இருக்கக் கூடாது எனத் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். இப்படிச் சிந்திக்கும்போது தனக்குள் ஒருவித கிளுகிளுப்பு தோன்றுவதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

மாதவி மிகவும் சுதந்திரமான எண்ணாங் கொண்டவள். அவளுடைய விடயங்கள் எதிலும் மற்றவர்களின் தலையீடு ஆதிக்கம் பெறுவதை அவள் விரும்புவதில்லை. மற்றவர்களிடம் ஆலோசனை கேட்பாள் ஆனால் தன் முடிவையே இறுதி முடிவாக எடுப்பாள்.

முகுந்தன் ஒருதடவை மாதவியுடன் கதைக்கும் போது ' ஏன் நாங்கள் காதலிக்கக் கூடாது?' என்று நேரடியாகவே கேட்டுவிட்டான்.

அவன் இப்படிக் கேட்பான் என்று மாதவி எதிர்பார்க்கவே இல்லை. கொஞ்சம் குழப்பமாகவே இருந்தாலும் மெல்லிய ஒரு சிரிப்போடு சமாளித்துக் கொண்டாள்.

மாதவியைப் பார்த்து அழகாகத் ' தாங்ஸ்' என்றான். எதற்கு இந்தத் தாங்ஸ் என்று அவளுக்குப் புரியவேயில்லை.

முகுந்தன் கனவுலகத்தில் மிதந்தான். மாதவியைப் பொறுத்தவரை குழப்பமாக இருந்தது.

அடுத்தநாள் முகுந்தனைக் கண்டபோது வழமைபோல் சகஜமாகப் பழக முடியவில்லை. நட்பு என்பதைத் தாண்டிய ஏதோ ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் கட்டுப்படுத்தியது.

முகுந்தனுக்கும் அவளின் மாற்றம் புரிந்தது. ஆனால் அவன் அதனை மாதவியின் வெட்கப்படும் தன்மையாகவே புரிந்து கொண்டான். இதனால் அவனது உரையாடல் தன்மையும் மாறியிருந்தது. வழமையான உரையாடல் இல்லாமல் கொஞ்சல் நிறைந்ததாக இருந்தது.

மாதவிக்கு இது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. முகுந்தனிடம் தான் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை என்றும் அதுவரை இப்படிக் கதைப்பதை நிறுத்தும் படியும் கேட்டுக் கொண்டாள். இப்படியே சில மாதங்கள் அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது.

ஒரு நாள் மாதவியின் வீட்டில் அவள் தன் அறையில் புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள். வெளியே அவளின் அம்மாவும் அப்பாவும் கதைத்தது அவள் காதுகளில் விழுந்தது. அவர்களைப் பொறுத்தவரை மூத்த பெண்ணின் கல்யாணம் இழுபட்டுச் செல்வது ஒரு துயரமாக இருந்தது. பல கல்யாணங்கள் பேசப்பட்டாலும் சிலவேளை அவள் நிராகரிப்பதாகவோ அல்லது பெற்றார் நிராகரிப்பதாகவோ நடந்து கொண்டிருந்தது. இந்த உரையாடலில் மாதவியின் அம்மா மாதவி பற்றியும் முகுந்தன் பற்றியும் விசாரித்து "அதுகளை எண்டாலும் கட்டி வைப்பமே" என்று கணவனிடம் கேட்பதை மாதவி அறைக்குள்ளிருந்து கேட்டாள்.

தமக்கையின் கல்யாண விடயத்தில் அம்மாவும் அப்பாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையோடிருப்பதை மாதவி உணர்ந்தாள். அந்தத் துயரத்தைத் தன் கல்யாணம் மூலமாக நிறைவு செய்யத் தாய் விரும்புவதையும் உணர்ந்து கொண்டாள். இந்த உணர்வு மாதவிக்குள்ளே பூகம்பமாக வீசத் தொடங்கியது. இந்தப் பூகம்பம் அவள் மனதில் சில விடையற்ற வினாக்களையும் எழுப்பத் தயங்கவில்லை. தன் தாய் தகப்பனின் துயரம் நிறைந்த சிந்தனைகள் மாதவி மனதில் முகுந்தன் பற்றிய நேர்மறையான சிந்தனைகளைத் தோற்றுவிக்க ஆரம்பித்தது. ஏன் முகுந்தனாக இருக்கக்கூடாது என்ற பார்வையில் சிந்தனைகள் தடம்மாறி இருந்தன.

இதற்குப் பின் அவள் முகுந்தனைப் பார்க்கும் போது தனக்குள் ஒருவித வெட்கம் பரவுவதாக உணர்ந்தாள். இந்தக் காதல் ஆரம்பித்து மூன்று வருடங்கள் இவர்களைக் கடந்து செல்கிறது.

இந்த மூன்று வருடங்களும் கல்வியில் கவனத்தைச் செலுத்தினர்.

கல்வி முடிந்ததும் பெற்றாரிடம் தங்கள் உறவு நிலைபற்றிக் கதைப்பதாக தீர்மானித்துக் கொண்டார்கள்.

முகுந்தனுக்கு இந்த விடயத்தை எப்படி அவரிடம் கதைப்பது என்பதே பிரச்சினையாக இருந்தது. இதை அவன் மாதவியிடம் கூறியபோது அவள் நகைத்தாள். அவனிடம் மறைந்திருக்கும் இந்தக் கோழைத்தனம் அவளுக்கு அசௌகரியத்தைக் கொடுத்தது.

உங்கள் அப்பா மறுத்தால் என்ன செய்வீர்கள்? என்று அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டபோது உடனடியாகப் பதில் கூறாது மௌனம் சாதித்தமை அவளுக்கு ஒருவித கோபத்தை உண்டு பண்ணியது. அன்று அவனோடு மேற்கொண்டு எதுவும் கதைக்காமல் வீட்டுக்கு வந்துவிட்டாள்.

ஒரு பிள்ளைக்குப் பசிக்கும்போது தாய் உணர்வதுபோல் பிள்ளையின் அமைதியின்மையைத் தகப்பன் புரிந்து கொள்வார். இன்றும் மாதவியின் மனக் குழப்பத்தை மாதவியின் அப்பா புரிந்துவிட்டார். அவளின் அருகில் சென்று முதுகில் மெதுவாகத்தட்டி அவளின் கண்களை உற்று நோக்கினார். அவளுக்கு மனப் பிரச்சினை வரும் போதெல்லாம் இந்த நிகழ்வு அங்கே நடக்கும்.

மாதவி கண்கலங்கியபடி தன் பிரச்சினையைத் தகப்பனிடம் கூறினாள். இவள் இப்படிக் கூறியதை சமையலறையில் இருந்த அம்மாவும் செவிமடுத்ததால் தன் வேலைகளையெல்லாம் அப்படியேவிட்டுவிட்டு வந்து விட்டாள்.

மாதவியின் தாய் வந்ததும் கேட்டது "பிள்ளை உன்னை அவர் விரும்பிறாரே"

"இப்ப அதுவல்ல பிரச்சினை அம்மா. அவருடைய குடும்பம் என்னை விரும்பயில்லை. அவரின்ரை அப்பா முடியாதென்றால் என்ன செய்வியள் என்று கேட்டதற்கு அவர் பதிலே சொல்லயில்லை."

"சரி அதுக்கென்ன. நானும் அப்பாவும் போய்க் கதைக்கிறம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தாய் கூறியதும் மாதவி தகப்பனை நிமிர்ந்து பார்த்தாள்.

மாதவியின் அப்பா அதனைப் புரிந்து கொண்டு "இது உன்ரை வாழ்க்கைப் பிரச்சினையம்மா. நீ வடிவாக யோசிச்சு ஒரு முடிவெடம்மா" என்று கூறி அவளை அவள் அறைக்கு அனுப்பிவிட்டார்.

மாதவியின் அம்மாவுக்குத் திருப்தியாக இல்லை. மகளுக்கு வருகின்ற இந்தச் சந்தர்ப்பம் நழுவப் போகிறதே என்ற மனக் கலக்கம். பையனை அவள் பார்த்திருக்கிறாள். மாதவியைத் தேடிப் படிப்பு சம்பந்தமாகக் கதைக்க வந்திருக்கிறான். மாதவி அவனை தன்னுடைய நல்ல நண்பர் என்றே அறிமுகம் செய்திருக்கிறாள். அப்போதே மாதவியின் அம்மாவின் மனதில் மாதவியின் மாப்பிள்ளையாகப் பதிந்திருந்தான்.

இப்போ அது காதலாக மாறும் சூழ்நிலை உருவானதால் விட்டுவிடக் கூடாது என்கின்ற வேகமே அவளிடம் இருந்தது. ஒரு சாதாரண தாயின் சராசரி விருப்பம்.

அதை அவள் செயற்படுத்துவதற்காகக் கணவனோடு கதைக்க விரும்பியபோது அவர் அவளைக் கட்டுப்படுத்திப் பிள்ளையின் போக்கில்விட்டு அவள் எங்களைக் கதைக்கச் சொன்னாலொழிய நாங்கள் எதுவும் செய்யக் கூடாது என்று கூறிவிட்டார்.

"என்றாலும் நல்ல பொடியனப்பா" என்று கூறித் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள்.

முகுந்தன் தன் காதல் விடயத்தை வீட்டில் சொன்னபோது அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் உடனேயே மறுத்துவிட்டாள். முகுந்தன் எதிர் பார்த்ததுதான். ஆனாலும் தான் 7 வருடமாகக் காதலிப்பதாகவும் மாதவியே தனக்கு வேண்டுமென்றும் வாதிட்டான். அவனுடைய அப்பாவும் சம்மதிக்கவில்லை. அம்மாவும் சம்மதிக்கவில்லை. முகுந்தனும் விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. இரு வாரங்களாக அவன் அவர்களுடன் கதைக்கவில்லை. அதேநேரம் மாதவியையும் சந்திக்கவில்லை.

மாதவி பல தடவை முயற்சித்தும் அவனைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஏதோ நடக்கிறது என்பதை மட்டும் அவள் உணர்ந்து கொண்டாள். அவளுக்குப் பதற்றமாகவும் அதேநேரம் வேதனையாகவும் இருந்தது.

முகுந்தனின் அம்மாவைப் பொறுத்தவரை மாதவியின் குடும்பம் தங்களுக்கு ஏற்ற குடும்பமில்லை என்ற எண்ணம் அவளை நெருப்பின்மேல் நிற்க வைத்துக் கொண்டிருந்தது. எந்த வகையிலும் இந்தக் காதலை அடியோடு அழித்துவிட வேண்டுமென்பதில் விடாப்பிடியாக நின்றாள். அவளின் அந்த ஆக்ரோசமும் முகுந்தனின் அப்பாவின் கண்டும் காணாத போக்கும் மாதவி – முகுந்தனின் காதல் வாழ்வில் பல பிரச்சினைகளை உண்டு பண்ணப் போகிறதென்ற உண்மையை ஓரளவுக்கு உணர்ந்து கொண்ட மாதவியின் அப்பா செய்வதறியாமல் கலங்கி நின்றார்.

முகுந்தனின் பிடிவாதமும் அசமந்தமான போக்கும் அவனின் பெற்றோரை கொஞ்சம் இறங்கி வரவைத்தன. மாதவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகுந்தனின் அப்பா அம்மா ஓரளவு இறங்கி வந்ததும் மாதவியின் அப்பா அம்மா அவர்கள் வீட்டுக்குச் சென்று முறையாகக் கதைத்துத் திருமணநாளும் குறிக்கப்பட்டது.

இதற்குப்பின் ஒரு நாள் மாதவியைத் தங்கள் வீட்டுக்குக் கூட்டிச் சென்றான் முகுந்தன். முகுந்தனின் அம்மா மாதவியோடு கதைத்தபடி கல்யாணத்துக்குப் பின் நீங்கள் இருவரும் எங்களோடைதான் இருக்கவேணும் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டா.

மாதவிக்கு உள்ளூரக் கோபம் வந்தாலும் அடக்கிக் கொண்டு நாங்கள் இரண்டுபேரும் வீடு வாங்குமட்டும் உங்கள் இருவரோடும் இருப்பம். அதற்குப் பிறகு எங்கள் வீட்டில் இருப்போம் என்று சிரித்தபடி கூறினாள்.

அவளின் இந்தப் பதில் முகுந்தனின் அம்மாவுக்கு எரிச்சலை ஊட்டினாலும் தன்னை அடக்கிக் கொண்டாள்.

மாதவிக்குக் கொஞ்சமும் முகுந்தனின் அம்மாவைப் பிடிக்கவில்லை. இதைச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது முகுந்தனிடம் கூறவும் தவறவில்லை. தங்களின் கல்யாணம் முடிந்ததும் இருவரும் தனிவீட்டில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை முகுந்தனிடம் கூறினாள்.

முகுந்தன் 'பார்ப்போம்' என்று கூறினானேயொழியத் தீர்மானமாகச் சொல்லவில்லை. முகுந்தனுக்குத் தாயின் குணம் நன்றாகத் தெரியும். கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் போதுமென்றாகிவிட்டது. இந்தப் பிரச்சினையை இப்போ கிளப்பினால் கல்யாணமே நின்றுவிடும் என்று பயந்தான். மாதவியைப் பொறுத்தவரை மனதளவில் அவள் இப்போ பயப்படத் தொடங்கியிருந்தாள்.

கல்யாண வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. கல்யாணத்துக்கான வரவேற்பு மடல் இந்தியாவிலிருந்து பதிப்பித்து எடுத்திருந்தனர். அவற்றை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வழங்குவதில் மாதவியின் பெற்றார் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஆனால் மாதவி மட்டும் எதையோ பறி கொடுத்தவள் போல் ஒன்றிலும் ஆர்வமாக ஈடுபடாது ஒதுங்கியே இருந்தாள்.

மாதவியின் இந்தப் போக்கை அவளின் சகோதரி சிந்தியா அவதானிக்கத் தவறவில்லை. சிந்தியா அவளை அணுகிக் காரணம் கேட்டபோது மாதவி மனந்திறந்து சிந்தியாவிடம் சொல்லிவிட்டாள்.

"நான் இந்தக் கல்யாணத்தை நிறுத்தினால் என்னவென்று யோசிக்கிறன்" என்றாள் மாதவி. சிந்தியா திடுக்கிட்டுப் போய் " நீ என்ன கதைக்கிறாய் என்று புரிஞ்சுதான் கதைக்கிறியா. நீ விரும்பின ஆளைத் தானே அம்மா அப்பா செய்து வைக்கினம். இன்னும் மூன்று கிழமைதான் இருக்குது" என்று சிந்தியா கூறியபோது மாதவி அழத் தொடங்கி விட்டாள்.

சிந்தியாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே குழப்பமாக இருந்தது. மாதவியின் அழுகைக்கான காரணம் அவளுக்குப் புரியவில்லை.

சிந்தியா காலத்தை விரயம் செய்யாமல் தாயிடமே நேரே சென்றாள். தாயிடம் மாதவியின் நிலைபற்றிக் கூறியபோது அவள் இடிந்துவிட்டாள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த மாதவியின் அப்பாவும் தான் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு வந்தார்.

குழப்பமான சூழ்நிலை. நான் நினைச்சனான் என்று மாதவியின் அப்பா கூறினார். பிரச்சினை வேறுபோக்கில் திரும்புவதை மாதவியின் அம்மா விரும்பவில்லை.

"இதப்பா கல்யாணம் முடிஞ்சாப்போலை அவை தீர்மானிக்கிற விசயம். இதை ஏன் முன்னுக்கே கேட்டுக் குழம்புவான். மாதவியிட்டை இதைச் சொல்லம்மா" என்று விடயத்தைக் காவி வந்த மாதவியின் அக்காவிடம் கூறினாள் மாதவியின் அம்மா.

அதன்பின்பு சிந்தியா மாதவியிடம் வந்து பக்குவமாக அதை அவளுக்குக் கூறியபோதும் ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டாலும் மாதவியால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவளுடைய மனம் என்னவோ கல்யாணத்தை நிறுத்துதல் நல்லதென்றே நினைத்தது.

ஆனால் காலம் கடந்துவிட்டது. அம்மா ஒத்துக் கொள்ளப் போவதில்லை. தாயின் மனதைப் புண்படுத்த மாதவி விரும்பவில்லை. நடக்கிறது நடக்கட்டுமென்று விட்டுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

மாதவி பக்கத்தில் மாதவியும் முகுந்தனின் பக்கத்தில் அவனின் தாயும் சகோதரிகளும் இந்தக் கல்யாணம் குழம்பாதா என்ற எதிர் பார்ப்பிலேயே இயங்கிக் கொண்டிருந்தனர்.

கல்யாண நாளும் வந்தது. மிக ஆடம்பரமாகக் கல்யாணம் நடைபெற்றது. அம்மி மிதித்து அருந்ததி பார்த்து சூரியனைச் சாட்சியாக வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்கக் கல்யாணம் நடந்து முடிந்தது.

மாதவி கல்யாணத்தின்பின் முகுந்தனின் வீட்டில் வாழ ஆரம்பிக்கிறாள்.

சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் மாதவிக்கும் முகுந்தனின் சகோதரிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. இது மாதவி எதிர் பார்க்காத ஒன்று. முகுந்தன் எதிர் பார்த்திருந்தாலும் இவ்வளவு சீக்கிரம் அது ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கவில்லை. இந்தப் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. மாதவிக்கு இது ஒரு தலையிடியாகப் போய்விட்டது.

முகுந்தனுக்கு இதனைச் சொல்லித் தான் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த வீட்டுக்குச் செல்வோமா எனக் கேட்கிறாள். மாதவி கல்யாணத்துக்கு முன்பே தனக்கென ஒரு வீடு வாங்கியிருந்தாள். அந்த வீட்டுக்கு போவதற்குத்தான் முகுந்தனிடம் கேட்டாள்.

முகுந்தனுக்குத் தர்மசங்கடமான நிலை. மாதவிக்கு நடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை அவனும் அவதானித்துக் கொண்டு தானிருந்தான். மாதவிக்குச் சார்பாக முடிவெடுத்தால் வீட்டாரோடு முரண்படவேண்டி வரும். வீட்டாருக்குச் சார்பாக எடுத்தால் மாதவியோடு முரண்படவேண்டி வரும். அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

இது நடந்து இரு கிழமைகள் ஆகிவிட்டன.

இந்த இடையில் மாதவிக்குப் பதவி உயர்வும் கிடைத்திருந்தது.

இதனைப் பயன்படுத்த முகுந்தன் திட்டமிட்டான். தகப்பனிடம் சென்று மாதவியின் பதவி உயர்வு பற்றிக் கூறி மாதவியின் வீடு வேலை செய்யும் இடத்துக்கு அருகில் இருப்பதால் தானும் மாதவியும் அங்கே சென்று இருக்கப் போவதாகவும் கூறினான்.

இதற்கு முகுந்தனின் தகப்பன் எதுவும் கூறவில்லை. அமைதியாகவே இருந்தார். அடுத்தநாள் மாதவி வேலையால் வந்த பின்பு மாதவியைக் கூப்பிட்டு அவளுக்குப் பதவி உயர்வு கிடைத்ததற்காக வாழ்த்தி விட்டு இப்போ இந்தப் பதவி உயர்வு அவசியம்தானா என்றும் கேட்டார்.

கல்யாணம் நடந்த புதிதில் இப்படியான வேலையைப் பொறுப்பேற்றால் வாழ்க்கை நிம்மதியாக இருக்காது. என்னைப் பொறுத்தவரை நீ இதனை ஏற்றுக் கொள்ளவேண்டாம் என்று கட்டொன்று வெட்டொன்றாகச் சொல்லி விட்டார்.

மாதவி பதில் கூறக் கூட விடவில்லை. மாதவி எதுவும் கூறாமல் அறைக்குள் சென்றுவிட்டாள். அறைக்குள் சென்றவளது மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதித்தது. எதையும் தாய்க்குக் கூறிப் பழக்கப்பட்ட மாதவி இந்த விடயத்தையும் தொலை பேசி மூலமாகக் கூறிவிட்டாள்.

மாதவியின் அம்மாவுக்கு விடயத்தைக் கேள்விப்பட்ட நேரந் தொடக்கம் ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்ட மாதிரி ஒரு உணர்வு. தன் பிள்ளையின் திறமைக்குக் கிடைத்த உயர்வை மறுத்தது மிகமிகத் தவறு என்றே பட்டது. அதே வேகத்தில் முகுந்தன் வீட்டுக்குத் தொலைபேசி எடுத்து முகுந்தனின் அப்பாவைத் திக்குமுக்காட வைத்துவிட்டாள். இங்கேதான் பிரச்சினை அவர்கள் குடும்பத்துள் தாராளமாக நுழைந்தது.

முகுந்தன் வேலையால் வந்தபோது யாரும் அவனோடு கதைக்கவில்லை. வீட்டில் உள்ள அமைதி ஏதோ பெரியளவில் நடந்துள்ளதென்பதை முகுந்தனுக்கு உணர்த்தியது.

யாருடனும் கதையாமல் நேரே தன் அறைக்குள் சென்றுவிட்டான். அறைக்குள் மாதவி கலங்கியபடி இருந்தாள். முகுந்தன் அவளை விசாரித்தபோது அவளும் நடந்தவற்றைக் கூறினாள்.

"சரி அதையேன் உம்மடை அம்மாவுக்குச் சொன்னனீர்?"

"அம்மாவுக்குச் சொல்லாமல் வேறை யாருக்குச் சொல்றது. உம்மடை அப்பா ஏன் எங்கடை தனிப்பட்ட விசயத்திலை தலையிடுறார்?"

"அவர் அறிவுரை மாதிரிச் சொல்லியிருப்பார். நீர் அதை ஏன் சீரியசாய் எடுக்கிறீர்?"

"அப்ப உங்கடை அப்பா சொல்றது ..சரியெண்டு நினைக்கிறீரோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத விக்குக் கோபம் வந்துவிட்டது.

"நான் சரியெண்டு சொல்லயில்லை. அதுக்கு முக்கியத்துவம் குடுத்திருக்கத் தேவையில்லை."

"சரி உதை விடும். நாங்கள் எப்ப போறம்" என்றாள் மாதவி.

"அப்பாவிட்டைச் சொல்லியிட்டன். இப்ப வேறை பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறீர். பார்ப்பம்"

"இல்லை. நாளைக்கே போகவேணும்." பிடிவாதம் பிடித்தாள் மாதவி. முகுந்தனுக்குக் குழப்பமாக இருந்தது. மனைவி சொல்வதிலும் நியாயம் இருப்பதாக அவனுக்குப்பட்டது. அதேநேரம் தாய் தந்தையர் சொல்லும் நியாயங்களையும் தட்டிக் கழிக்க முடியவில்லை.

மாதவியைப் பொறுத்தவரை கணவன் தனக்காக இல்லையே என்கின்ற துன்பம் அவளை நிலை இழக்கச் செய்து கொண்டிருந்தது. லண்டனில் பிறந்து வளர்ந்த பெண்ணாக இருந்தாலும் மனதளவில் அவள் தமிழ்ப் பெண்ணே.

முகுந்தன் ஒரு முடிவு எடுக்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்ட நிலையில் மாதவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மாதவியின் திறமையும் துடிதுடிப்பும் அவனுக்குத் தெரியும். அதேநேரம் தகப்பனின் அடாவடித்தனமும் சூழ்ச்சித் தன்மைகளும் அவன் அறிந்தவையே.

இந்த இரண்டு இயல்புகளையும் தூக்கிப் பார்த்த முகுந்தன் மாதவியைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் சாமான்களைக் கட்டும் நாங்கள் அந்தவீட்டுக்குப் போவம்" என்றான். மாதவி எதிர்பார்க்கவேயில்லை.
துரிதமாக இயங்கினாள். முகுந்தன் தகப்பனிடம் சென்று நிரம்பக் கதைக்காமல் தாங்கள் போகப்போவதைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு அவருடைய பதிலுக்கும் காத்திராமல் அறைக்குள் சென்றுவிட்டான்.

முகுந்தனின் அப்பா தன்னைச் சுதாகரித்துக் கொள்வதற்குள் முகுந்தனும் மாதவியும் தயாராகி விட்டார்கள். விடயத்தைக் கேள்விப்பட்டு முகுந்தனின் அம்மாவும் தங்கச்சியும் வருவதற்குள் முகுந்தனும் மாதவியும் பெட்டிகளுடன் வெளியில் வந்துவிட்டார்கள்.

முகுந்தனின் அப்பா தன் மனைவியையும் மகளையும் எதுவும் கதைக்க விடவில்லை.

முகுந்தனும் மாதவியும் புறப்பட்டுவிட்டார்கள்.

வீடு நிசப்தமாக இருந்தது. யாரும் யாருடனும் கதைக்கவில்லை. எதிர்பாராத இந்த நிகழ்வு அவர்களை அதிர்ச்சியடைய வைத்துவிட்டது. முகுந்தனின் தாய் குமுறிக் கொண்டிருந்தாள். முகுந்தனின் சகோதரி சுடு எண்ணையில் போட்ட மிளகாய்போல் பொரிந்து கொண்டிருந்தாள். தகப்பன் அமைதியாகவே இருந்தார். உள்ளுக்குள் இதனை எப்படி வெற்றியாக்குவது என்பது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

மொத்தத்தில் அந்தக் குடும்பமே வெறிபிடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலேயே இருந்தது.

மூன்று கிழமைகளாக எவ்வித தொடர்புமில்லாமல் இருபக்கமும் இருந்தனர். இடையில் முகுந்தனின் அப்பா எத்தனையோ தடவை தொலைபேசி எடுத்தும் முகுந்தன் பதிலளிக்கவில்லை. இதனை மாதவியும் அவதானித்தே வந்தாள்.

மாதவிக்கு முகுந்தனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

முகுந்தன் தன் தந்தையின் மீது அதிகமான பாசங் கொண்டவன் என்பது மாதவிக்குத் தெரியும். இதனால் முகுந்தனைப் பார்த்து " நீர் ஒருக்கால் அப்பாவைப் பார்த்துவிட்டு வாருமன்" என்று கூறினாள். மாதவி இப்படிக் கூறியதும் முகுந்தனுக்கு மனதுக்குள் சந்தோசம் ஏற்பட்டது. இதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "பார்ப்பம்" என்று மட்டும் கூறிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டான்.

வேலைக்குச் சென்ற முகுந்தன் இன்று வேலை முடிந்ததும் அப்பா அம்மா வீட்டுக்குச் சென்று வருவதாக மாதவிக்குக் குறுஞ்செய்தி அனுப்பினான்.

குறுஞ்செய்தியைப் பார்த்த மாதவி 'பாவம்' என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டாள். வேலை முடிந்து பயத்துடனும் பாசத்துடனும் தன் வீட்டுக்குச் சென்றான் முகுந்தன். பெரிதாக வரவேற்பு இருக்கவில்லை. முதலில் தகப்பன் தான் கதைத்தார். அதவும் சாதாரண வழமையான உரையாடலாகவே இருந்தது. கொஞ்சநேரம் இருந்துவிட்டுப் புறப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தன் வீட்டுக்கு வந்தபோது மாலை ஆறரையாகி இருந்தது. அப்போதான் மாதவியும் வேலையால் வந்திருந்தாள்.

முகுந்தன் எதுவும் கூறவில்லை. மாதவியும் எதுவும் கேட்கவில்லை. அமைதியாக இருவரும் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

அவள் கேட்பாளென்று அவனும் அவன் சொல்வானென்று அவளும் மௌனமாக இருந்தனர். கணவன் மனைவிக்கிடையில் உள்ள இந்த மௌனம் அழகு நிறைந்தது. சில சமயங்களில் சில விடயங்கள் சொல்லப்படாமலே போய்விடும். இங்கேயும் அதே நிலைதான். முகுந்தன் வீடு சென்றதும் அங்கு நடந்த விடயங்களும் இருவருக்கும் பேசா விடயங்களாகி விட்டன. முகுந்தனின் முக மாறுதலை வைத்து சில விடங்களை மாதவி ஊகித்து விடுவாள். அடுத்த நாளும் வேலை முடிந்ததும் தன் வீட்டுக்கு முகுந்தன் சென்றான்.

அங்கு உருவான நிலைமை நேற்றையதைவிட எதிரானதாக இருந்தது. வரவேற்பு பலமாக இருந்தது. நன்றாகக் கதைத்தார்கள். அம்மாவின் உபசரிப்பு வித்தியாசமாக இருந்தது. அப்பா சந்தோசமாக கலகலவென்று கதைத்ததார். முகுந்தனுக்கு இந்த மாற்றம் உள்ளூரப் பயத்தையும் கொடுத்தது.

இரவு எட்டு மணியாகி விட்டது. புறப்பட எழுந்தான்.

அப்போது அவன் தங்கை அவனை இன்னும் சிறிது நேரம் இருந்து போகச் சொன்னாள். மாதவிக்கு விடயத்தை குறுஞ் செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அனுப்பி விட்டு இருந்தான். சிறுவயதுக் கதைகளெல்லாம் கூறி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இரவு பத்து மணியாக முகுந்தன் எழுந்து புறப்பட ஆயத்தம் செய்தான்.

நல்லாய் நேரமாகியிட்டுது இஞ்சை தங்கியிட்டுப் போவன் தம்பி என்று தாய் கூறியபோது அவனால் மறுக்கமுடியவில்லை.

பத்துமணி மட்டும் முகுந்தன் வராதது மாதவிக்கு மனதில் ஒரு பயத்தை உருவாக்கியது. ஏதோ ஒரு இனம் புரியாத பயம் அவளின் மனதை அலைக்களித்தது.

அப்போது அவளது கைப்பேசி அடித்தது. முகுந்தன்தான் தொடர்பில் வந்தான். பயத்தோடு கைப்பேசியை எடுத்தாள்.

"மாதவி இண்டைக்கு வரமாட்டன். நான் அப்பா அம்மாவோடை இருந்திட்டு நாளைக்கு வாறன்" மாதவிக்குப் பகீரென்றிருந்தது.

அவள் எதுவும் சொல்லவில்லை. சரியென்று சொல்லிவிட்டுக் கைப்பேசியை வைத்துவிட்டாள். தாய்க்கு எடுத்துச் சொல்லலாமா என்று நினைத்தாள். ஆனால் சொல்லவில்லை. அது பிரச்சினையைக் கொண்டுவரும் என்பதால் சொல்லவில்லை.

பலவிதமான யோசனைகளுடன் படுக்கைக்குச் செல்லமுன் வீட்டுக் கதவுகளெல்லாம் சரியாகப் பூட்டப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனித்துவிட்டுப் படுக்கப் போய்விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலையும் அவன் வரவில்லை. அங்கிருந்தே காரியாலயத்துக்குச் சென்றுவிட்டான். மாதவிக்கு மனம் பாரமாக இருப்பதுபோல் தோன்றியது. என்ன நடக்கின்றது என்பது அவளுக்குப் புரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டாள். அன்று மாலை முகுந்தன் வீட்டுக்கு வந்திருந்தான். மாதவி எதையும் காட்டிக் கொள்ளவில்லை. நேற்று ஏன் வரவில்லை என்று அவள் கேட்பாளா என்று விரும்பினான். அவளும் கேட்கவில்லை. அமைதியான நகர்வு அங்கே இருந்தது.

உணவைத் தயார் செய்து மேசையில் வைத்தாள்.

"சாப்பிடலாமே?" என்றாள்.

கலகலவென்று கதைக்கும் மாதவியாக அவள் இல்லை. முகுந்தனுக்குப் புரியவேயில்லை. அவனுக்கு மாதவிமேல் கோபம் வந்தது. அம்மா அப்பா வீட்டுக்குத்தானே சென்றேன். இதற்கு ஏன் இவ்வளவு கோபம். அவளைச் சமாதானப்படுத்த அவன் விரும்பவேயில்லை. மேசையில் வைத்த சாப்பாட்டை இருவரும் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போய்விட்டனர். மாதவிக்குத் தூக்கம் வரவில்லை. அவள் மன அழுத்தத்தால் புரண்டு புரண்டு படுத்தாள்.

அடுத்தநாள் அவள் எழும்பியபோது முகுந்தன் வீட்டில் இல்லை. மேசையில் ஒரு துண்டு இருந்தது. அதில் ' நான் வேலை முடிந்ததும் அம்மா அப்பா வீட்டுக்குப் போகிறேன். எனக்காகக் காத்திராமல் நீ சாப்பிட்டுவிட்டுப் படு' என்று முகுந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியிருந்தான். மாதவி ஏதோவெல்லாம் கற்பனை செய்யத் தொடங்கிவிட்டாள்.

‘இன்றைக்குப் போகவேண்டாம் . வீட்டுக்கு வாருங்கள். எனக்கு உடல் நிலை சரியில்லை’ என்று குறுஞ்செய்தி அனுப்பினாள்.

செய்தி பார்த்தது தெரிந்தது. ஆனால் பதில் வரவில்லை.

அவளுக்குத் தலையிடியாக இருந்தது. வேலைத்தலத்துக்கு சுகயீனவிடுப்புக்கு அறிவித்துவிட்டுக் கதிரையில் சிறிது நேரம் இருந்தாள். அவனுடைய பதிலுக்காகக் காத்திருந்தாள். எதுவுமே வரவில்லை.

இரண்டு பரசிற்றாமோல் எடுத்துப் போட்டாள். அப்படியே படுத்துவிட்டாள்.

முகுந்தன் அவள் அனுப்பிய செய்தியைப் பார்த்தும் உதாசீனம் செய்து விட்டான். அவனைப் பொறுத்தவரை ‘மாதவி நடிக்கிறாள். தன்னைத் தன் பெற்றாருடன் பழகவிடாமல் தடுக்கிறாள்.’ என்பதுதான் எண்ணமாக இருந்தது.

அன்று மாலையும் அவன் பெற்றார் வீட்டுக்குச் சென்றுவிட்டான். அங்கு அவனுக்கு வார்த்தைகளாலும் அளவுக்கதிகமான உபசரிப்பாலும் மெல்லக் கொல்லும் விசம் வழங்கப்படுகின்றதென்ற உண்மையை முகுந்தன் உணரத் தவறிவிட்டான். தன் பெற்றாரை மாதவியைவிட நம்பத் தொடங்கினான் முகுந்தன். மாதவி வீட்டில் தலையிடியினால் அங்குமிங்கும் புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான மன அழுத்தத்துக்கு ஆளாகி இருந்தாள்.

முகுந்தன் அன்றிரவும் வீட்டுக்கு வரவில்லை. அதை அவன் மாதவிக்கு அறிவிக்கவுமில்லை.

காலை மாதவியால் கட்டிலிலிருந்து எழும்ப முடியவில்லை. காய்ச்சல் காய்ந்து கொண்டிருந்தது. தொலைபேசியை எடுத்துத் தாய்க்கு விடயத்தைக் கூறினாள்.

மாதவியின் அம்மாவும் அப்பாவும் பதறிப்போய் வந்தபோது மாதவி சுயநினைவற்று இருந்தாள். அங்கே முகுந்தன் இல்லை. முகுந்தனின் கைப்பேசிக்கு மாதவியின் அப்பா எடுத்தார்.

முகுந்தன் கண்டும் காணாதவன் போல் சத்தத்தைக் குறைத்துவிட்டு இருந்துவிட்டான்.

அவரும் தொடர்ந்து அடித்துக் கொண்டேயிருந்தார். இறுதியாகத் தவிர்க்க முடியாமல் கைப்பேசியை முகுந்தன் எடுத்தான். மாதவியின் அப்பா முகுந்தனிடம் மாதவியின் நிலையைக் கூறினார்.

"நீங்கள் ஏதாவது செய்யுங்கோ.நான் வேலையைவிட்டு வரேலாது"

என்று கூறிவிட்டுக் கைப்பேசியை வைத்துவிட்டான்.

மாதவியின் அப்பா திடுக்கிட்டுவிட்டார். இவர்களுக்குள் ஏதோ பிரச்சினை உள்ளதென்பதை அவரின் உள் மனம் கூறியது.

அதற்குள் அம்புலன்ஸ் வந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவியை பரீட்சித்துப் பார்த்தார்கள். மாதவி அப்போது கண் முழித்திருந்தாள்.

மாதவி மன அழுத்தத்தில் இருப்பதாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்கள். திருமணம் முடிந்து ஆறுமாதத்தில் அவள் மன அழுத்தத்துக்கு ஆளானமை அவளின் பெற்றாரை கலங்க வைத்தது. மாதவியின் அம்மாவுக்கு முகுந்தன் சம்பந்தப்பட்ட விடயங்களை மாதவியின அப்பா மறைத்து விட்டார்.

முகுந்தன் வேலையால் வருமட்டும் காத்திருந்தார்கள். இந்த இடைவெளியில் மாதவியின் அம்மா உணவு தயாரிக்கும் பணியில் இறங்கி முடிக்கும் தறுவாயில் முகுந்தன் கதவைத் திறந்து வந்தான். வந்தவன் நேரே மாதவியின் அறைக்குச் செல்லவில்லை.

இதை அவதானித்த மாதவியின் அப்பா இனி இருந்தால் அவர்களின் விடயத்தில் நாம் தலையிட வேண்டியதாகிவிடும் என்று நினைத்து மனைவியையும் கூட்டிக் கொண்டு வெளியேறினார்.

அவர்கள் போனதும் முகுந்தன் மாதவி படுத்திருந்த இடத்துக்கு வந்தான். மாதவி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"மாதவி" முகுந்தன் அழைத்தான். மாதவி பதில் எதுவும் கூறவில்லை.

"உம்மைத்தான் கூப்பிடுறன்."

இம் முறை மாதவி அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகை வந்துவிட்டது. விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டாள். முகுந்தன் அவளுக்கருகிலிருந்து கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறினான். இருவரும் சமாதானமாகி மாதவியின் அம்மா சமைத்து வைத்த உணவைச் சாப்பிட்டு விட்டுப் படுக்கைக்குப் போய்விட்டார்கள்.

அடுத்த நாள் இருவரும் சந்தோசமாகவே வேலைக்குப் போனார்கள். தொடர்ந்து இரு நாட்கள் எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. மூன்றாம் நாள் முகுந்தன் நேரத்திற்கு வீட்டுக்கு வரவில்லை. மாதவிக்கு குழப்பமாக இருந்தது. தனது கைப்பேசியைப் பார்த்தாள் . முகுந்தனது குறுஞ்செய்தி இருந்தது.

வேலை முடிந்து அம்மா அப்பா வீட்டுக்குப் போய் வருவதாகக் குறிப்பிட்டிருந்தான்.

மாதவிக்கு தாங்க முடியவில்லை. மாதவி ஏதோ ஒருவிதத்தில் தன்னையும் முகுந்தனையும் முகுந்தனின் பெற்றார் பிரித்து விடுவார்களென்ற பயம் இருந்தது.

இதனை யாரிடமும் சொல்லாமல் வைத்திருந்ததால் அவளுக்கு ஒருவித மன அழுத்தம் ஏற்பட ஆரம்பித்திருந்தது. அவளுடைய மன அழுத்தத்தை அதிகரிக்கும் விதமாக முகுந்தன் அன்றிரவு வீடு திரும்பவில்லை.

முகுந்தன் வீட்டில் அவன் வீட்டிற்குச் செல்ல புறப்பட்டபோது முகுந்தனின் அம்மா திடீரென்று மயங்கி விழுந்து நாடகமாட அந்த நாடகத்திற்கு அவனின் தங்கை சேர்ந்து தாளமிட நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விடுகிறது. இனிமல் போக வேண்டாம் படுத்துவிட்டு நாளைக்குப் போ என்று சொல்ல முகுந்தனும் மாதவிக்குக் குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு அங்கு படுத்துவிட்டான்.

இது இன்னும் மாதவியின் மனதில் காயத்தை ஏற்படுத்த அவள் மன அழுத்தத்தால் துன்பப்படலானாள். அவள் யாரிடமாவது இதைக் கூறினால் அழுத்தத்திலிருந்து வெளிவருவது சுலபமாக இருந்திருக்கும். தன்னால் தன் குடும்பம் அழுத்தத்தில் துன்பப்படக் கூடாது என்று நினைத்ததினால் எல்லாவற்றையும் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள்.

முகுந்தனின் அம்மாவுக்கு மாதவியைப் பிடிப்பதில்லை. கல்யாணத்துக்கு முன்பும் பிடிவாதமாக நின்றவள் அவள். முகுந்தனின் பிடிவாதத்தால் தான் இக் கல்யாணமே நடந்தது. கல்யாணத்தின் பின் எல்லாம் சரிவரும் என்றே முகுந்தன் நினைத்தான்.

கல்யாணத்தின் பின் இன்னும் மோசமான கட்டத்துக்கே சென்றது.

முகுந்தனைப் பொறுத்தவரை அம்மா அப்பா வீட்டில் தங்குவது பிரச்சினையாக இருக்கவில்லை. அதே நேரம் மாதவி தனிய இருக்கிறாளே என்ற சிந்தனை அவனுக்கு வராததுதான் பிரச்சினையை உந்தித் தள்ளுகிறது. அவனை அந்தக் கோணத்தில் சிந்திக்கவிடாது அவன் அம்மாவும் தங்கையும் காய்களை நகர்த்துகிறார்கள் என்ற விடயம் கடைசிவரையும் அவனுக்குத் தெரியாமல் போய்விட்டது. மாதவியின் விடயம் அவளின் அப்பாவுக்குக் கசிந்துவிட்டது. கலங்கிப் போய்விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக இருந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். பின்பு முகுந்தனோடு தான் கதைக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டார்.

அவர் புறப்பட்ட கொஞ்ச நேரத்தில் மாதவி வீட்டுக்குத் தொலைபேசி எடுத்து நடந்த விடயங்களைத் தாயிடம் கூறிவிட்டாள்.

விடயம் கேள்விப்பட்ட நேரம் தொடக்கம் மாதவியின் அம்மாவால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. தொலைபேசியை எடுத்து முகுந்தனின் அம்மாவை தன்னால் முடிந்தளவு பேசிவிட்டு கதிரையில் அப்படியே சாய்ந்து படுத்துவிட்டாள்.

முகுந்தனின் அம்மா இதனைத் தனக்குச் சாதகமாக்கித் தொலைபேசியை எடுத்து மாதவியின் அம்மா பேசியதையிட்டு அழுது அழுது சொல்ல முகுந்தன் கோபத்தின் உச்சத்துக்குச் சென்றுவிட்டான்.

இந்த நேரம் பார்த்து மாதவியின் அப்பா அங்கு வந்தார். அவர் ஒரு அப்பிராணி. முகுந்தனோடு தன்மையாகக் கதைக்கவே வந்தார். ஆனால் முகுந்தன் அந்த நிலையில் இல்லை. அவரைக் கண்டதும் முகுந்தன் முந்திக் கொண்டான். அவருடைய வயதுக்குக் கூட மதிப்புக் கொடாமல் பேசிவிட்டான்.

மாதவியின் அப்பாவால் எதுவுமே சொல்ல முடியவில்லை. கடைசியாக முகுந்தன் சொன்ன வார்த்தைகள் அவரைத் திடுக்கிட வைத்துவிட்டன.

"உம்மட மகளை இண்டைக்கே கொண்டுவந்து விடிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இனி அவள் வேண்டாம்"

இந்த வசனங்கள் ஆயிரம் சுட்டியலால் அவரது தலையில் அடித்ததுபோல் இருந்தது. எதுவுமே கதைக்காமல் வந்துவிட்டார்.

மாலை வேலை முடிந்து வீட்டிற்குப் போன முகுந்தனை மாதவி ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

"உம்மடை அம்மா எப்பிடி என்ரை அம்மாவைப் பேசேலும்?" என்று கோபமாகக் கேட்டான்.

"போதாக்குறைக்கு கொப்பர் ஏன் ஒவ்விசுக்கு வந்தவர்"

மாதவி கோபமாக அவனை நோக்கித் திரும்பி

"எல்லாம் உன்னாலை தான் வந்தது" என்று ஆங்கிலத்தில் கத்தினாள்.

" ஏன் நான் என்ன செய்தனான்? அம்மாவிட்டை போனது தப்பே"

" தப்புத்தான். போன நீ இரவு வந்திருக்கலாமில்லே. ஒவ்வொரு நாளும் அங்கை போறதும் ..அங்கையே படுக்கிறதும் எந்த வகையிலை சரி" மாதவி பேசினாள் என்பதைவிடக் கத்தினாள் என்பதே சரி. கையில் கிடந்த சாமானையெல்லாம் தூக்கி எறிந்தாள்.

"உமக்கென்ன விசரே?" என்று அவனும் பதிலுக்குக் கத்தினான்.

"இனி உன்னோடை வாழேலாது."

என்று அவள் கத்த "அப்ப வெளிக்கிடடி" என்று அவன் சொல்ல அவளும் வெளிக்கிட கோபத்தில் அவளைக் கொண்டுபோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் தாய் தகப்பன் வீட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டான்.

எதுவுமே திட்டமிடப்படாமல் கணப் பொழுதுகளில் நடந்து முடிந்து விடுகிறது. உணர்ச்சிவசப்பட்டு ஆணும் பெண்ணும் எடுக்கின்ற முடிவுகள் பல சமயங்களில் அவர்களுக்கிடையேயான பிரிவை நிரந்தரமாக்கி விடுகிறது. மாதவியும் முகுந்தனும் ஏழு வருடங்கள் காதலர்களாக இருந்தும் அவர்கள் தங்கள் மன அதிர்வுகளைப் புரியத் தவறிவிட்டார்கள். இதன் வெளிப்பாடு சிறு பிரச்சினை ஒன்று பூதாகரமாக்கப்பட்டு இருவரும் விவாகரத்துச் செய்யுமளவுக்கு நிலைமை வந்துவிட்டது. இதற்கு எந்தவகையிலும் பெற்றார்கள் குற்றவாளிகளாக முடியாது. முழுக்கமுழுக்க மாதவியும் முகுந்தனுமே பொறுப்பாளிகளாவர். மாதவியை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டபின் முகுந்தன் தன் பெற்றாரிடம் சென்றுவிட்டான். இரு வாரங்கள் கழிந்தபின் முகுந்தன் பெற்றாரின் வற்புறுத்தலினால் வழக்கறிஞர் மூலமாக விவாகரத்துப் பத்திரத்தை மாதவி வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

முகுந்தனைவிட்டு வந்த நாள் தொடக்கம் மாதவி அதி கூடிய மன அழுத்தத்தில் இருந்தாள். அவளால் எதையும் சரியாகச் செய்யமுடியவில்லை. குழப்பமான ஒரு மனநிலையிலேயே இருந்தாள். இதனை அவதானித்த மாதவியின் சகோதரி தகப்பனிடம் இதனைக் கூறி முழுக்குடும்பமும் இரண்டு கிழமைகளுக்கு வெளியில் செல்வதென்று தீர்மானித்து பல நாடுகள் ஆலயங்களுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வந்தனர்.

மாதவியின் உடம்பு மட்டும்தான் இவர்களுடன் சென்றதேயொழிய அவளின் அந்தரங்க ஆன்மா எங்கோவெல்லாம் தறிகெட்டுச் சுற்றித் திரிந்தது.

மாதவியின் பெற்றோரும் தங்களால் முடிந்தளவுக்கு அவளின் புலனை ஒரு நிலைக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்தனர். எதுவும் வெற்றி யளித்ததாகத் தெரியவில்லை.

அவர்கள் மீண்டும் நாட்டுக்கு வந்த மறுநாள் முகுந்தனால் அனுப்பப்பட்ட விவாகரத்துக் கடிதம் வந்திருந்தது. மாதவியின் அம்மாவால் அதனைத் தாங்கமுடியவில்லை. மாதவி அதனைப் பெரிதாக எடுக்கவில்லை. அவளின் சிந்தனை வேறு உலகத்தில் இருந்தது. மன அழுத்தம் என்பது ஒரு நோய். இந்த மன அழுத்தம் ஒரு கட்டத்தில் மன நோயாக மாறிவிடுகிறது. உலகத்தில் உள்ள நோய்களில் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும்தான் தங்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை வைத்தியருக்குப் புரியவைக்க முடியாதவர்களாக உள்ளனர். உறவினர்கள் கூறுகின்றதை வைத்தே வைத்தியர்கள் வைத்தியம் செய்கின்றனர். இது கூடுதலாக உறவு முறிவுகளினால்தான் பெரும்பாலும் ஏற்படுகிறது. இது தற்கொலைக்கும் இட்டுச் சென்றுவிடும். மாதவியைப் பொறுத்தளவில் முகுந்தனின் அவசரமுடிவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. வேலைக்குப் போவதும் வந்து அறைக்குள் முடங்குவதுமாகவே இருந்தாள். யாரோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பதில்லை. அவளின் மனம் துடித்துக் கொண்டிருந்தது. மூளை ஒழுங்கற்ற சிந்தனைகளில் இருந்தது. கத்தியைக் கண்டால் அதனால் தன்னைக் குத்த வேண்டும் போல நினைப்பாள். வாழ்க்கையை வெறுக்கத் தொடங்கியிருந்தாள். வாழ்வதில் ஒரு அர்த்தம் இருப்பதாக அவளுக்குப்படவில்லை. அன்று அப்படியான சிந்தனையோடு காரையெடுத்துக் கொண்டு போய்விட்டாள். மாலை ஏழுமணியாகியும் அவள் வரவில்லை. மாதவியின் குடும்பம் அவள் போகக்கூடிய இடம் எல்லாம் விசாரித்துப் பார்த்தார்கள். விடை கிடைக்கவில்லை. நேரம் இரவு பத்து மணியாகிவிட்டது. மாதவியின் அப்பா அம்மா சகோதரி மூவரும் இருட்டுக்குள் அமர்ந்திருந்தனர். அப்போது கதவு தட்டப்பட்டது. வந்தது மாதவியல்ல. மாதவியின் கார் இலக்கத்தோடு ஒரு பொலிஸ்காரர் நின்றிருந்தார்.

**ஜீவநதி - 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள் ஒரு மனிதன் ஒரு குடும்பம்

இலண்டன் மாநகரம் கலங்கிக் கொண்டிருந்தது.

வீதிகளெல்லாம் வெறிச்சோடிப் போய் இருந்தது. அரசாங்கம் ஊரடங்கு அறிவியாமலே ஊரடங்கி இருந்தது.

திறந்திருந்த கடைகளில் சாமான்கள் எதுவுமில்லாமல் வெறுந் தட்டுகள் சிரித்துக் கொண்டிருந்தன.

வீடுகளில் எல்லோரும் தொலைக்காட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டிக்கு முன்னாலிருந்து செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மக்கள் யாரையும் அவசியமின்றி வெளியே வரவேண்டாமென அரசாங்கம் மணிக்கொருதரம் அறிவித்துக் கொண்டிருந்தது. குறிப்பாக அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள் வீட்டிற்குள்ளேயே இருக்கவேண்டும் என்றும் அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பிரதான வீதியின் மூன்றாவது குறுக்குத் தெருவின் நான்காவது வீட்டில் உள்ள குடும்பம் நடுங்கிக் கொண்டிருந்தது.

ஒரு வயதுபோனவர். பெயர் கந்தையா. அவர் மனைவி கற்பகம். மற்றும் அவரின் மகள் திவ்யா அவளின் கணவர் கோபி. பிள்ளைகள் இருவர் சேனா , சேந்தன். இந்த ஆறுபேரும் ஒருவித பயத்துடன் வீட்டுக்குள் முடங்கி இருந்தனர்.

"அம்மா தாத்தாவுக்குக் கொரோனா வருமா?"

" இல்லையம்மா தாத்தாவுக்கு வராது"

"அப்ப ஏன் தாத்தாவைத் தனி அறையிலை வைச்சிருக்கிறியள்"

சின்னப் பையன் சேந்தன் கேட்டான்.

"அப்ப, தாத்தாவோடை நாங்கள் விளையாட ஏலாதா?"

"விளையாடலாம் கொஞ்சநாள் பொறுங்கோ"

என்று பல கேள்விகளைக் கேட்டுவிட்டு சேனாவும் சேந்தனும் களைத்துப் போய் ஆளுக்கொரு மூலையில் ஒதுங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர்.

திவ்யா தேநீர் போடுவதற்காக குசினிக்குள் சென்றாள். கோபி கைப்பேசியை வைத்து கிண்டிக் கொண்டிருந்தான்.

கோபி கட்டிடவேலைகளுக்கு உதவி ஆளாகச் செல்பவன். சடுதியாக ஏற்பட்ட இந்த நிகழ்வு அவன் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுவிட்டது.

வேலைக்குப் போனால்தான் அவனுக்குச் சம்பளம். வைரசின் தாக்கம் வேலை நின்றுவிட்டது. பணப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்தது. இப்போ சமாளிக்க அவனால் முடியும். இது இன்னும் மூன்று மாதங்கள் செல்லுமெனின் அவனால் சமாளிக்க முடியாது. இதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

தேநீரைக் கொண்டுவந்து அருகில் வைத்துவிட்டுக் கணவனை உற்றுப் பார்த்தாள் திவ்யா.

"என்னப்பா யோசிக்கிறியள்?"

" உம்மட்டை ஏதும் காசு இருக்கே. இந்த வைரசுப் பிரச்சினை மூண்டு மாதம் செல்லுமாம்"

" என்னட்டை எங்கையப்பா. நீங்கள் சிலவுக்குத் தாறதிலை அங்கையிங்கை மிச்சம் பிடிச்சுக் கொஞ்சம் கிடக்குது"

" இந்த மூண்டு மாதமும் வேலையுமிராது. பிள்ளையளுக்குச் சாப்பாடு வயது போனவைக்கு மருந்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவு..தலையிடிக்குதப்பா.."

கோபி ஒரு இந்திய கட்டிட அமைப்பாளரின் கீழ் தான் வேலை செய்கிறான். ஒவ்வொரு நாளும் காலை எட்டு மணிக்கு வேலைக்குப் புறப்பட்டால் மாலை எட்டு மணியளவிலேயே வீட்டுக்கு வருவான். அவனுக்குக் கிடைக்கும் பணம் 100 பவுண்கள் மட்டுமே.

இப்போ இந்த வைரஸ் பிரச்சினையால் வேலை நிறுத்தப்பட்டுவிட்டது. அரசாங்கம் அறிவித்திருக்கும் எந்த அவசர உதவித் தொகையையும் அவனால் பெற முடியாது. அவன் பதிந்து வேலை செய்யவில்லை.

இங்கு சில சிறு முதலாளிகள் குறைந்த சம்பளத்தில் கோபி போன்றவர்களை வேலைக்கமர்த்தி தங்கள் கணக்கில் இவர்களுக்குக் கூடச் சம்பளம் கொடுப்பதுபோல் காட்டி வரித்திணைக்களத்தை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கிறார்கள்.

கோபி போன்றவர்களும் தங்கள் கூலியை எவ்வித பதிவும் இல்லாமல் கையில் வாங்கிக் கொண்டு அரசாங்கத்துக்குத் தாங்கள் வேலை செய்யாததுபோல் காட்டி அரச உதவிப் பணத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

" ஏனப்பா சோசல் காசு வரும் தானே?" என்று திவ்யா கணவனுக்கு ஆறுதல் கூறுகிறாள்.

" அது வந்தென்ன பிரயோசனம் அப்பிடியே கொண்டு போய்ச் சீட்டுக் கட்டச் சரி" என்றான் கவலையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஓமப்பா அது வேறை கிடக்குது. அது எப்பையப்பா முடியுது?"

" இரண்டு சீட்டும் முடிய இன்னும் ஆறுமாதம் கிடக்குது"

" நீங்கள் அண்டைக்குச் சீட்டு எடுக்கேக்கையே சொன்னனான். இப்ப அவசரப்பட வேண்டாமெண்டு. ஆத்திரம் அந்தரத்துக்கு எடுக்கலாமெண்டு. நீங்கள் கேட்டால்தானே. அவசர அவசரமாய் தங்கச்சிக்கு எடுத்தனுப்பினியள். இப்ப கிடந்து மண்டையைப் போட்டு உடைக்கிறியள்."

அவன் அவளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தான்.

" ம்..உதுக்கு மட்டும் குறைச்சலில்லை."

"நாளையோடை பள்ளிக்கூடங்களும் பூட்டிறாங்களாம்" அவள்தான் சொன்னாள்.

" அப்ப ரியூசனும் பூட்டுவினமே?" அவன் கேட்டவிதத்தில் அவனின் துன்பம் தெரிந்தது.

" எண்டுதான் நினைக்கிறன்"

இதற்குள் திவ்யாவின் அப்பா இருமும் சத்தம் கேட்டது.

" இந்த நேரம் பார்த்து இந்த மனிசனும் இருமித் தள்ளுது"

"கொஞ்சம் தண்ணியைக் குடியுங்கோ" என்று கூறிவிட்டுக் குவளையொன்றில் தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்தாள்.

அவன் என்ன நினைத்தானோ தெரியவில்லை,

"இஞ்சரப்பா பிள்ளையளை அவரோட விளையாட விடாதையும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஏனப்பா, அது சும்மா இருமல்தான்"

" அது எனக்கும் தெரியும்.. எதுக்கும் முன்னெச்சரிக்கையா இருக்கிறது நல்லது தானை"

"ஓமப்பா அதுவும் சரிதான். அவர் வாழ்ந்து முடிச்சவர். "

" பிள்ளை அப்பா இருமிறார். பயமாய்க் கிடக்குது. கொஸ்பிற்றலுக்கு போன் பண்ணுவமே" திவ்யாவின் அம்மா கூறினாள்.

" என்னப்பா செய்வம்?" திவ்யா கணவனிடம் கேட்டாள்.

" கொஸ்பிற்றலுக்கு போன் பண்ணினால் அவங்கள் வந்து கொண்டு போயிடுவாங்கள். பிறகு அவ்வளவுதான். எதுக்கும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்பம்" இதற்குப் பின் யாரும் அவரைப் பற்றிக் கதைக்கவில்லை. அவர் அந்த அறையில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தார். சாப்பாடு நேரத்துக்கு நேரம் அவர் மனைவி மரகதம் கொண்டு சென்று கொடுப்பாள். மரகதம் குசினிக்குள் சென்று எலுமிச்சம் பழம் தேடினாள். எலுமிச்சம் பழத்தை இளஞ் சூட்டுத் தண்ணியிலை பிழிஞ்சு கொஞ்சம் மஞ்சளும் போட்டுக் கொடுத்தால் தொண்டைக் கரகரப்புப் போய் இருமல் நிற்கும். இது மரகதத்துக்கு மரகதத்தின் அம்மா சொல்லிக் கொடுத்த மருந்து.

குசினிக்குள் எலுமிச்சம் பழம் இல்லை. குளிர் சாதனப் பெட்டிக்குள்ளும் தேடினாள். அங்கும் இல்லை. அப்போது அங்க வந்த திவ்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்னம்மா தேடிறியள்?"

"எலுமிச்சம் பழம் தேடுறன். "

"அது முடிஞ்சுது. அம்மா நீயும் கவனமாயிரு"

வெளியில் வந்த திவ்யா கணவனுக்கருகில் போய்

" கோபி, வீட்டிலை மரக்கறியெல்லாம் முடிஞ்சுது வாங்கி வாறியளே" என்றாள்.

கோபி சிறிது நேரம் திவ்யாவின் முகத்தைப் பார்த்துவிட்டு

" ஒரு உண்டியல் சாமிப் படத்துக்கு முன்னாலை இருக்குதெல்லே. எடுத்து வாரும்."

திவ்யா திகைத்துப் போய்

" உங்களுக்கென்ன விசரே. அது சின்னவனுக்கு நேர்ந்தெல்லே வைச்சிருக்கிறம். பிள்ளை ஒழுங்காய்க் கதையானாம் எண்டு முருகனுக்கு நேர்ந்ததெல்லே?"

" சரி அதுக்கென்ன. அவன் இப்ப நல்லாய்க் கதைக்கிறான் தானே. எடுத்து வாரும். தமிழ் கடையிலை சாமான் என்ன சும்மாவே தரப் போறான்" என்று குரலை உயர்த்தி உரமாகக் கதைத்தான்.

திவ்யா அதற்குப் பிறகு கதைக்கவேயில்லை.

பேசாமல் எழும்பிப்போய் உண்டியலை எடுத்து வந்தாள்.

இதையெல்லாம் வைத்த கண் வெட்டாமல் மரகதம் பார்த்துக் கொண்டிருந்தாள். மரகதத்துக்கு என்னவோ இவை ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கவில்லை. ஆனால் மருமகனுக்கு முன்னால் கதைப்பது நாகரிகமில்லை என்று பேசாமல் இருந்துவிட்டாள்.

கோபியும் திவ்யாவும் உண்டியலை உடைத்தார்கள். மரகதத்துக்கு தன் நெஞ்சில் யாரோ அடித்தது போல் இருந்தது. கோபியும் திவ்யாவும் மரகதத்தை ஒருதரம் திரும்பிப் பார்த்துவிட்டு எண்ணத் தொடங்கினர். கூடுதலாக ஒரு பெனி, இரு பெனிதான் இருந்தன. அவற்றை வேறாக்கி வைத்துவிட்டு எண்ணத் துவங்கினார்கள்.

ஈற்றில் மொத்தமாக முப்பத்தைந்து பவுண்கள் இருந்தன.

அவற்றோடு கடைக்குப் புறப்பட்டான்.

“இருமலுக்கு மருந்தேதும் இருந்தால் வாங்குங்கோ அதோடை இந்த பட்டியலிலை இருக்கிற மரக்கறியளையும் வாங்கி வாங்கோ” என்றாள்.

கோபி மெல்லிதாகச் சிரித்தான்.

“ ஏன் சிரிக்கிறியள்?”என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

“பின்னை என்னப்பா. இருக்கிறது 35 பவுண். நீ தந்திருக்கிற பட்டியலிலை உள்ள எல்லாம் வாங்க கிட்டத்தட்ட அறுபது எழுபது பவுண் வேண்டும். முயற்சிக்கிறன்” என்று கூறிவிட்டு வெளியில் இறங்கி நடக்கத் தொடங்கினான்.

வீதியெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தது. சந்தியிலை இரண்டு பொலிஸ் காரர். கோபி அவர்கள் நிற்குமிடத்தை அணுக அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை எங்கே செல்கிறான் என வினவ கோபியும் கடையின் பெயரைச் சொல்லி காரணத்தையும் கூறுகிறான்.

அவர்கள் அவனை அனுமதிக்கிறார்கள்.

மனதுக்குள் இந்த நாட்டுப் பொலிஸ்காரர் நல்லவங்கள் என்று கூறிக் கொள்கிறான். கடையில் இன்று அவ்வளவாகச் சனம் இல்லை. சாமான்களைப் பார்க்கிறான். எல்லாம் ஆனைவிலை குதிரை விலையாக இருக்கிறது. வழமையாக 1.99 ஆக இருக்கும் விலைகளெல்லாம் 5.99 ஆக மாறி இருந்தது. கொள்ளைக்காரக் கூட்டம் என்று மனதுக்குள் சொல்லிக் கொள்கிறான். அங்கு வேலை செய்யும் ஒரு பொடியனைத் தட்டி " தம்பி, இதென்ன எல்லாம் கொள்ளை விலையாகக் கிடக்குது"

அவன் கோபியை ஒரு முறாய்ப்பு முறாய்த்துவிட்டு " இப்ப இதுதான் விலை. வாங்கிறதெண்டால் வாங்குங்கோ. இல்லாட்டில் போங்கோ."

முகத்தில் அடித்தாற்போல் கூறிவிட்டுப் போகிறான். கோபிக்குக் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டான்.

' சனியன்கள் இந்த நேரம் பார்த்து லாபம் சம்பாதிக்கப் பார்க்கிறான்களே...' என்று தனக்குள் முணுமுணுத்தபடி திவ்யா தந்த பட்டியலைப் பார்க்கிறான். மிஞ்சிமிஞ்சிப் போனால் நாலு சாமான்கள்தான் வாங்கலாம் என நினைத்தவன் மனம்

' பாவம் கிழவன். இருமல் மருந்து வாங்கவேணும். அதுக்கு எப்பிடியும் 3 பவுண் வேணும். பிள்ளையள் பாவம். நான் போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வந்து பையைப் பறிக்குங்கள் . அதுக்கு 2 பவுண் வேணும். அப்ப இப்ப 30 பவுண்தான் இருக்குது. புட்டு மா எழுதியிருக்கிறாள். முந்தி அது 2.99 தான். இப்ப அதை 7.99 போட்டிருக்கிறான். மூன்று மரக்கறியும் எடுத்தால் காசு சரி. மாமிசம் நினைக்கவே ஏலாது.' இப்படி எல்லாம் கணக்குப் பார்த்து வாங்கிக் கொண்டு வெளியில் வந்தபிறகு தான் பஸ்ஸிற்குக் காசில்லை என்பது தெரிந்தது. 'நடப்பம்' என்று தீர்மானித்து வீடு நோக்கி நடக்கத் தொடங்குகிறான். அந்தச் சந்தியில் அதே பொலிஸ்காரர் நிற்கினம். அவர்களைப் பார்த்து மெல்லிய புன்னகையைத் தவளவிட்டவாறு வீட்டை நோக்கி நடக்கிறான். பாரத்தில் கையெல்லாம் நோகிறது. அந்த முடக்காலை திரும்ப அவனின் வீட்டின் முன்னால் அம்புலன்ஸ் வண்டி நிற்கிறது.

' சாய் எங்கடை வீடாய் இராது'

நெருங்க நெருங்க அது அவன் வீட்டிற்குத்தான் என்பது புரிகிறது. யாராக இருக்கும்? அவன் மனைவி அழுது கொண்டிருக்கிறாள். அவளின் அப்பாவைத்தான் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். பக்கத்து வீட்டுக் காரரைப் பார்க்கிறான். அவரின்ரை முக பாவனையில் அவர் தான் மனிசனின் இருமல் சத்தம் கேட்டு அறிவிச்சிருக்கவேணும். கோபி தான் கொண்டுவந்த பையைப் பார்க்கிறான்.

' சாய் கொஞ்சம் முதல் தெரிஞ்சிருந்தால் இருமல் மருந்தை வாங்காமல் விட்டிருக்கலாம்'

**காற்றுவெளி- 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம்

அலாரம் அடித்துக்
கொண்டேயிருந்தது.

எழும்புவதற்குப் பஞ்சியாக இருந்தது. எட்டி அமத்தி விட்டுப் படுத்துவிட்டேன். உடம்பு படுத்ததே ஒழிய மனம் படுக்க மறுத்தது.' எழும்பு எழும்பு இன்று நேற்றுப்போல் இல்லை' என்று மனம் சொல்லிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிட் வைரசின் கோர தாண்டவத்தால் மனம் படபடத்துக் கொண்டிருந்தது. எல்லோரையும் போலத் தனிமைப்படுத்த வீட்டில் நான் நிற்கமுடியாது. நான் வைரசோடு யுத்தம் புரியும் போராளி. ஆம் நான் ஒரு வைத்தியர். என் பெயர் அனிதா. அலாரத்தைக் கட்டுப்படுத்தினாலும் என் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எழும்பிவிட்டேன். நான் வைத்திய சாலையில் 9 மணிக்கு நிற்கவேண்டும். பிள்ளைகளைத் தயார்ப்படுத்திப் பாடசாலையில் விடவேண்டும். அவசர அவசரமாக அவர்களைக் குளிக்கவைத்துப் பாடசாலை உடுப்புகள் போட்டுச் சாப்பிடுவதற்காக மேசையில் இருத்திவிட்டுக் குசினிக்குள் அவர்களுக்கான சாப்பாட்டைக் கொண்டு வந்து பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டு ,

" சாப்பிடுங்கோ அம்மா குளிச்சிட்டு வாறன்" என்று கூறிவிட்டு அவசர அவசரமாகக் குளியலறைக்குள் நுழைகிறேன். சுடுதண்ணியில் குளித்துவிட்டு வெளியேவர பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். உடுப்பை மாற்றிக் கொண்டு நானும் மேசைக்கு வந்து இரண்டு துண்டு பாண் சாப்பிடும் போது பிள்ளைகளுக்கு வைரசைப்பற்றி கூறுகிறேன். மூத்தவனுக்கு ஓரளவு விளங்குகிறது. இளையவன் புரிஞ்சு கொள்ளவில்லை.

இனிமல் இவர்களைப் பாடசாலையில் கொண்டு சென்றுவிட வேண்டும். என் மூளை என்னை இயக்கிக் கொண்டிருந்தது.

காரில் அவர்களை ஏற்றிப் பாடசாலையில் கொண்டுபோய் விட்டதும்தான் மனம் ஒரு நிலைக்கு வந்தது.
அவர்களைவிட்டுவிட்டு திரும்பவும்வந்து காரில் ஏறிச் சிறிது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஸ்ரிய ரிங்கில் தலையை சாய்த்தபடி இருந்தேன்.

அப்போதுதான் காரில் ஏறும் போது சின்னவன் கேட்ட கேள்வி ஞாபகத்துக்கு வந்தது.

" Are you going to kill that virus today?"

எவ்வளவு அர்த்தமுள்ள வினா? மனதுள் ஒரு வேகம் பிறக்கிறது. வாகனத்தை இயக்குகிறேன். எப்படியாவது அந்த வைரசை நான் தோற்கடிக்க வேண்டும். மனதிற்குள் ஒரு வெறித்தன்மை ஏற்படுகிறது. கடவுளுக்கு அடுத்தபடியாக மருத்துவர் ஒருவர்தான் உயிர்களோடு ஒட்டி உறவாடுபவர் என்று யாரோ சொன்னது மனதுள் வருகிறது. வேகமாகப் போகிறேன். சரியான நேரத்திற்கு வைத்தியசாலைக்கு வந்து விட்டேன். நேராக என் பகுதிக்குச் சென்று பாதுகாப்பு உடைகளை அணிந்து கொண்டு எனக்கு ஒதுக்கப்பட்ட நோயாளிகளை அணுகுகின்றேன்.

வைத்தியசாலை நிரம்பி வழிகிறது. ஒவ்வொரு நிமிடமும் புதிய நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரையும் பார்க்கும்போது மனம் வேதனைப்படுகிறது. என்னுடைய நோயாளியை அணுகுகிறேன். குப்புறப் படுத்திருக்கிறார். அவர் வேதனையில் அனுங்குவது எனக்குக் கேட்கிறது. எனக்குப் பக்கத்தில் நின்ற தாதியைப் பார்க்கிறேன். அந்த நோயாளியின் குறிப்பைப் பார்க்கிறேன். இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறது. தாதி என்னைப் பார்த்து சைகையால் உணர்த்துகிறாள். அந்த மனிதர் இன்னும் சில மணிநேரங்கள் தான் உயிர் வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வெளியே வந்துவிட்டேன். மரணம்..மரணம் பார்ப்பதெல்லாம் மரணம். என் தொலைபேசி அலறுகிறது. அதை எடுக்கப் பயமாக இருக்கிறது.

வரும் செய்தி என் பிள்ளைகளைப் பற்றியதாக இருக்குமோ. நான் அவர்களுக்கு வைரசைக் காவிச் சென்று விட்டேனோ! அல்லது செய்தி என் தாத்தா பாட்டி பற்றி இருக்குமோ! நான் அங்கு போகவில்லையே! நான் அவர்களுக்குக் காவி இருக்கமாட்டேன். அல்லது அப்பா அம்மா பற்றியதாக இருக்குமோ! அப்பா ஏற்கனவே வருத்தக்காரர். அவருக்கு நீரிழிவு நோயும் இருக்கிறது. இந்த வைரஸ் சனியன் அப்படியான ஆட்களை விடாது. நேற்று அப்பா என்னைச் சந்தித்தாரே. அவருக்கு வந்துவிட்டதோ.

கடவுளே அப்பிடி ஒண்டும் இருக்கக் கூடாது. கைப்பேசியை எடுக்கிறேன். வந்த செய்தியைக் கேட்டதும் ஏங்கிப்போனேன். என்னோடு படித்து என்னோடு வைத்தியராக வெளியேறிய என் நண்பி நளாயினி இறந்து விட்டாள். கத்தி அழவேண்டும் போல் இருந்தது. முடியாதே. எனக்குப் பக்கத்தில் தாதி வந்து நின்றாள். நான் இப்போது வாட்டிலுள்ள நோயாளிகளைப் பார்க்க வேண்டுமென்று கூறினாள். புறப்பட்டேன். போகும் வழியில் தாதிக்கு என் நண்பியின் மரணத்தைப்பற்றிக் கூறினேன். அவளும் அதிர்ந்து போனாள். நாங்கள் வார்ட்டை அடைந்ததும் அந்த வார்டிலிருந்து ஓடி வந்த தாதி என்னுடைய பொறுப்பிலுள்ள முதுமையால் ஏற்படும் மறதி வருத்தம் உடைய நோயாளி சத்தமிட்டுக் கொண்டே இருப்பதாகக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர அவசரமாக அவளின் கட்டிலை நெருங்குகின்றேன். அவளை ஆறுதல் படுத்துகிறேன். அவளின் பிரச்சினை தன்னை யாரும் பார்க்க வரவில்லை என்பதே. அவளுக்கு இங்கு நடக்கும் வைரஸ் பிரச்சினைகள் பற்றித் தெரிவதில்லை. யாருமே வீதிக்கு வரமுடியாது என்பதும் தெரிவதில்லை. பாவம் அவள். அவளை ஒரு மாதிரிச் சமாளித்துவிட்டு திரும்பவும் கொரோனா வார்ட்டுக்குச் செல்வதற்காகத் திரும்புகிறேன். திடீரென்று கைப்பேசி அடிக்கிறது. இதயம் வேகமாக அடிக்கிறது. அதே பயம். அதே எண்ணாங்கள். வாய் கடவுளே.. கடவுளே என்று முணுமுணுக்கிறது. மெதுவாக கைப்பேசியை எடுக்கிறேன். செய்தியைக் கேட்டதும் பதறிப் போகிறேன். அப்படியே அருகில் இருந்த கதிரையில் இருந்துவிட்டேன். கண்கள் குளமாகிவிட்டன. அருகில் நின்ற தாதி பதட்டப்பட்டு என்ன..என்ன என்று கேட்கிறாள். தலையில் கையை வைத்தபடி இறுதி வருடம் சர்வகலாசாலையில் கற்பித்த விரிவுரையாளர் சற்று முன்னர் கொரோனாவால் காலமாகிவிட்டார் என்று நண்பி கூறியதைத் தாதிக்குக் கூறினேன்.

இந்தக் கொரோனாமீது கோபம் கொப்புளித்துக் கொண்டு வருகிறது. இருவரும் வேகமாகக் கொரோனா வார்ட்டுக்குச் செல்கிறோம். அங்கேயும் பேரிடி காத்திருக்கிறது. நான் பார்த்து மருந்து கொடுத்துவிட்டுப்போன நோயாளி மரணமாகி விட்டார் என்பதுதான். இந்த வைரசை நான் கொல்ல மாட்டேனா? மாலை வீட்டுக்குப் போகும் போது என் மகன் “அம்மா கொரோனாவைக் கொன்று விட்டாயா?” என்று கேட்கப் போகிறானே என்ன பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வேன்?. மனக் கலக்கத்தோடு மற்ற நோயாளியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறேன். தேவையான பாதுகாப்பு உடைகள் இல்லை. சில தாதிகள் தங்களால் பணி புரிய முடியாது என ஒதுங்கி நிற்கிறார்கள். வைத்திய சாலையின் பிரதான வைத்தியருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அரசாங்கம் பாதுகாப்பு உபகரணங்கள் இன்னும் வந்து சேரவில்லை என்று கூறுகிறது. அரசாங்கத்தின் இப் பொறுப்பற்ற தன்மைக்குத் தங்களைப் பலியிட முடியாது என்று சில வைத்தியர்களும் தாதிகளும் வேலைப் புறக்கணிப்புச் செய்கிறார்கள். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. குழப்பமாக இருக்கிறது. நானும்தான் உடுப்பு மாற்றவேண்டும் . மாற்றுவதற்கு எதுவுமில்லை. தூரத்தில் நின்று வார்ட்டைப் பார்க்கிறேன். ஒரு முதியவர் மூச்செடுப்பதற்குக் கஸ்டப்படுகிறார். அவருக்குக் கட்டாயமாக வென்ரிலேற்றர் பூட்டப்பட வேண்டும். இன்னும் ஐந்து நிமிடத்தில் பூட்டாவிட்டால் அவர் இறந்து விடுவார். என்ன செய்வது? என்ன செய்வது? மனம் துடிதுடிக்கிறது. அவரைக் காப்பாற்றப் போய் எனக்கு வந்துவிட்டால் என் பிள்ளைகள்....! எனக்குள் பேசும் இரு மனங்களும் போராடுகின்றன. நான் மெல்ல மெல்ல அந்த முதிய-வரை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன். வைத்தியத் தொழில் என்பது அர்பணித்தலோடு தொடர்புபட்டது. இத் தொழிலில் சொந்த பந்த பாசங்களுக்கு இடமேயில்லை என்று எங்கோ படித்த வாசகம் என்னை ஆக்கிரமித்துக் கொள்கிறது.

**ஜீவநதி- 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி அதிகாரம் கை மாறுகிறது

"என்னப்பா இது இவன்கள் படியாமல் விளையாடிக் கொண்டிருக்கிறான்கள்"

நான் கணவனைப் பார்த்துச் சொன்னேன். அவர் அதைக் கேளாமல் செய்தி பார்க்கிறதிலை இருக்கிறார். அவருக்குக் கொஞ்சம் கூடப் பிள்ளையளைப் பற்றின சிந்தனையில்லை. வேலைக்கும் போறதில்லை. இந்தக் கறுமம் வைரஸ் வந்தநாள் தொடக்கம் மனிசன் வீட்டிலைதான். மனிசனுக்குச் சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசம் . கொம்புயூட்டருக்கு முன்னாலை இருந்து எல்லா விதமான உதவிப் பணத்துக்கும் அப்பிளை பண்ணி அவற்றை எடுக்கிறதிலை தான் அவற்றை பொழுது போகுது. சும்மாயிருக்க அவற்றை சம்பளத்தைவிடக் காசு வருது. ஏதோ காசு வந்தால் சரி எண்ட நினைப்பு. ஒரு துரும்பு வேலையும் மனிசன் செய்யாது.

ஒரு மாதமாகுது வீட்டுக்கைதான் இருக்கிறம். மனிசன் எந்த நேரமும் உந்த முகப் புத்தகத்தோடைதான்.
தான் இருக்கிறது காணாதெண்டு என்னையும் கூப்பிட்டு வைச்சு ' இஞ்சரப்பா இதைப் பாரும்' எண்டு அலுப்பு வேறை.

பிள்ளையளின்ரை படிப்பு கேள்விக் குறியாய்க் கிடக்குது.
சாப்பிட்டால் மட்டும் போதுமா?

" உனக்கென்னடி சும்மா சாப்பிடு வருது. அவன்தான் சொல்றான் வீட்டுக்குள்ளை இரு என்று . சும்மா சமைச்சுப்போட்டு படத்தைப் பார்த்துக் கொண்டு இரன்ரி"

அடிக்கடி இப்படித்தான் சொல்லிறார்.

எப்பிடி இருக்கேலும்?

மூத்தவன் 11 ஆம் வகுப்புப் படிக்கிறான். இரண்டாவது 10 ஆம் வகுப்புப் படிக்கிறான். கடைசி இந்த வருசம் ஸ்கொலர்சிப் பரீட்சை (11 +) எடுக்க வேணும். எனக்கு நெஞ்சு பக்குப்பக்கென்று அடிக்குது.

அண்டைக்கு ஒருமாதிரிக் கஸ்டப்பட்டு இந்த மனிசனை மூத்தவனின்ரை பள்ளிக்குப் போன்பண்ணிக் கதைக்கச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் பள்ளிக்கூடக்காரன்கள் சொன்ன சேதி எனக்குத் தலையிலை இடி விழுந்த மாதிரி இருந்துது.

இந்த முறை பரீட்சை இல்லையாம். வகுப்புச் சோதனையளிலை எடுத்த புள்ளியளை வைச்சு பெறுபேறு தருவாங்களாம்.

இதென்ன அநியாயம். எங்கடை பிள்ளையள் கடைசி நேரத்திலை படிச்சுத்தானை புள்ளி எடுக்கிறவை. அதுக்கும் பாழ்பட்ட வைரஸ் துண்டு வைச்சிட்டுது. பேசாமல் எங்கட நாட்டிலையே இருந்திருக்கலாம். சிங்களவனோடை ஒரு மாதிரிச் சமாளிக்கலாம். அங்கை சாகிற ஆக்களும் குறைவாம். இஞ்சை ஒவ்வொரு நாளும் முன்னூறு நானூறென்று சாகுதுகள். ஏதோ வளர்ந்த நாடு வளர்ந்த நாடு என்கிறாங்கள் ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை.

எங்கடை தமிழ்ப் பிள்ளையள் கடைசி நேரத்திலை இரவிரவாய்ப் படிச்சுத் தானை நல்ல பெறுபேறுகள் எடுக்கிறவை. இஞ்சை இப்ப என்னடாவெண்டால் இவ்வளவு நாளும் படிச்சதை வைச்சுத்தானாம் பெறுபேறு குடுப்பினமாம். அதோடை பிள்ளையளின்ரை பழக்கவழக்கங்களும் பார்ப்பினமாம். கடைசியிலை பெறு பேறு ஆசிரியரிலைதானாம் தங்கி இருக்குமாம். எங்கடை மூத்தவன் அந்த மற்ஸ் மாஸ்டரோடை அவ்வளவு சரியில்லை. அவரோடை ஒரே பிரச்சினை. அண்டைக்கு இந்த வைரசுப் பிரச்சினைக்கு முதல் நடந்த ஓப்பிண் ஈவினிங் கிலை அந்த மற்ஸ் மாஸ்டர் எவ்வளவு குற்றச்சாட்டு. என்ன செய்யிறது பேசாமல் கேட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்திட்டு வந்திட்டன். என்ரை பொடியனும் சரியான குழப்படிதான்.

சத்தியமாய்ச் சொல்லிறன் எங்கடை நாட்டிலை இருந்திருக்கலாம். அங்கையாயிருந்தால் அந்த மற்ஸ் வாத்தியை உண்டு இல்லை என்று ஆக்கி இருப்பன். இஞ்சை வந்து இருபது வருசமாகுது கறுமம் பிடிச்ச ஆங்கிலம் வாய்க்குள்ளை ஒழுங்காய் வராதாம்.

இந்த மனிசன் காலமை கோப்பி குடிச்ச நேரம் தொடக்கம் உந்தக் கொம் பியூட்டரிலைதான் இருக்கிறார்.

" இஞ்சரப்பா அவன் சின்னவனுக்குக் கொஞ்சம் கணக்குச் சொல்லிக் குடுங்கோவன்."

"கொஞ்சம் பொறும். கவுன்சிலிலை கொஞ்சக் காசு எடுக்கலாம்போலை கிடக்குது . குழப்பாதையும்"

எப்பபார்த்தாலும் உதுதான் பதில். அவங்கள் இப்ப பிரச்சினை இருக்கேக்கை பார்த்துப் பாராமல் கொடுப்பாங்கள். பிரச்சினை முடிய கணக்குப் பார்த்துத் திருப்பிக் கேட்கேக்கை தலையைச் சொறிஞ்சுகுண்டு முழுசுவர்.

ஊரிலை இருக்கேக்கை பேய்க் கெட்டிக்காரன். எல்லாப் பாடத்திலையும் புலி. சரியான கெட்டிக்காரன். வெளிநாட்டிலை வந்த நாள் தொடக்கம் பெற்றோல் ஸரேசனிலைதான் வேலை. களவாய் வேலை செய்யமாட்டார். ஒரு முயற்சியில்லை. சத்தியமாய்ச் சொல்லிறன் என்ரை இவர் ஊரிலை இருந்திருந்தால் நிலைமை வேறை. இஞ்ச வந்து சரியான சோம்பேறியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறினதுதான் மிச்சம்.

இப்ப இந்தக் கிருமியாலை வேலையும் இல்லை. ஒரே இலவசமாய்க் காசு எடுக்கிற முயற்சிதான். இந்தப் பிள்ளையளை ஆளாக்கிப் போட்டால் எனக்குப் போதும். அதுகளும் இந்த சந்தர்ப்பத்தைப் பாவிச்சுப் படிக்காமல் கொம்பியூட்டரிலை கேம் விளையாடுதுகள்.

பிள்ளையள் ஒவ்வொருவருக்கும் தனி அறை. மூத்தவை இரண்டு பேரின்ரை அறைக்குள்ளையும் ரிவி இருக்குது. கொம்பியூட்டரும் இருக்குது. நான் வாங்கேக்கையே மனிசனுக்குச் சொன்னனான்.

" வேண்டாமப்பா பொடியள் கெட்டுப் போயிடுங்கள். " எண்டு. கேட்டால்தானே. பிடிவாதமாய் நிண்டு வாங்கிக் குடுத்தவர்.

அவங்கள் நான் மேல போனால் படாரென்று ரிவியை நிப்பாட்டிப் போட்டு படிக்கிற மாதிரி இருப்பாங்கள். என்னத்தப் பார்க்குதுகளோ யாருக்குத் தெரியும். நான் வாயைக் குடுத்து மொக்கேனப்படாமல் வந்திடுவன். கீழை வந்து இவரிட்டைச் சொன்னால் நம்பமாட்டார். கண்டிக்க வேண்டியவர் கவனியாமல் இருந்தால் நான் என்ன செய்யிறது.

அவருக்குப் பிள்ளையளிலை சரியான நம்பிக்கை. இந்தக் காலத்திலை அப்பா அம்மா பிள்ளையளிலை வைக்கிற நம்பிக்கைதானை அவையைக் கெடுக்கிறது. இந்தக் காலத்துப் பிள்ளையள் அப்பிடியில்லை. சரியான நேரத்திலை காலை வாரி விட்டிடுங்கள். பிள்ளையளைக் குறை சொல்ல ஏலாது. அதுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிற கூட்டாளியளும் அப்பிடித்தானே.

எப்பதான் இந்தக் கெடுபிடியளைக் குறைச்சு இந்த மனிசனை வேலைக்குக் கூப்பிடப் போகிறாங்களோ எண்டிருக்குது.

இந்த உலகத்துக்கு ஏதோ நடக்கப் போகுது.

நெடுகக் கையைக் கழுவுங்கோ. மற்றவர்களிலையிருந்து 2 மீற்றர் தூரத்திலை விலகியிருக்கவும் சொல்லுறாங்கள். இதெல்லாம் நல்லதுக்கில்லை. முந்தியெண்டால் இந்த மனிசன் வீட்டை நில்லாராம் எண்டு கவலைப்படுவன். இப்ப போகாராம் எண்டு கவலை.

உந்தச் சனங்கள் கொத்துக் கொத்தாய்ச் சாகிறதை நினைத்தால் பயமாயும் கிடக்குது.

ஏதோ வளர்ந்த நாடு வளர்ந்த நாடு எண்டிறாங்கள் ஒரு சின்னக் கிருமியைக் கொல்லத் தெரியாமல் தவிக்கிறாங்கள். நாங்கள் எங்கையாவது மாறித் தவறாய்ப் பொய் சொல்லிக் காசு எடுத்திட்டால் உடனே கண்டு பிடிச்சுப் போடுவாங்கள்.

மனிசனுக்குச் சோம்பல் வந்திட்டுது. சோம்பல் வந்திட்டால் திரும்ப உஷாராகிறது கஸ்டம். உதவிக் காசுகள் எல்லாம் நிண்டாத்தான் உவர் உஷாராவர்.

பிள்ளையளின்ரை படிப்புக் குழம்பியிட்டுது. உழைப்புமில்லை. நாலு மனிசரோடை கதைக்கவும் முடியாது. வெளியிலை போறதெண்டால் முகமூடி போட வேணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதென்ன வாழ்க்கை. உப்பிடி வாழிறதைவிடச் சாகலாம் போல கிடக்குது. அண்டைக்குப் பக்கத்துக் கடையிலை மா வாங்கப் போனன். வழியிலை எங்களோடை நல்லாய்ப் பழகிற குடும்பமொண்டு வந்தவையள். கதைப்பமெண்டு போக அதுகள் டக்கெண்டு விலகி மற்றப் பக்கத்தாலை போயிட்டுதுகள்.

இனிமல் இப்பிடித்தானோ வாழ்க்கை ! வழமையெல்லாம் மாறப்போகுதோ! கடவுள் மாத்திறாரோ இல்லை மனிசன் மாத்திறானோ. ஒண்டும் புரியேல்லை.

சீனாக்காறன் செய்துவிட்ட கிருமியெண்டும் கதைக்கினம். சீனாக்காரனும் அமெரிக்காக்காரனும் சேர்ந்துவிட்டதெண்டும் கதைக்கினம். ஆர்விட்டாலென்ன கஸ்டப்படுகிறது நாங்கள் தானே.

கிருமியோடை வாழப்போறம்.

இந்தக் கிருமிதான் எங்கடை பிள்ளையளின்ரை படிப்பை மனிசன்மாரின்ரை வேலையை எங்கடை உறவு முறைகளைக் கலாசாரங்களை ஆழப்போகுதோ. கலங்கிப் போனன்.

அவர் இப்பவும் கொம்பியூட்டரிலை எங்கெங்கை இலவசமாய்க் காசு எடுக்கலாமென்று தேடிக் கொண்டிருக்கிறார். உலகம் ஒரு கிருமியின்ரை ஆட்சிக்குள்ளை வந்த மாதிரித் தெரியுது.

**ஜீவநதி - 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அப்பாக்களும் அம்மாக்களும்" என்ற இந்தச்
சிறுகதைத் தொகுப்பில் உள்ள பதினொரு சிறுகதைகளும்
சமூகம் சார்ந்த கதைகளாகவே
எழுதப்பட்டுள்ளமை மனதிற்கு நிறைவைத் தருகிறது.
"காலத்தின் கண்ணாடி" அல்லது
"காலத்தின் குரல்" இலக்கியம் என்பர்.
எழுத்தாளர் கரவை மு. தயாளன் தன் கதைகளில்
அவர் பிறந்த மண்ணிலும் வாழும் மண்ணிலும் நாளாந்தம்
நடக்கின்ற விடயங்களையும் மனிதர்களையும்
பிரதிபலிக்கின்றார் என்றால் மிகையல்ல.
உலகையே தன் ஆளுமைக்குட்படுத்திக்கொண்டிருக்கும்
"கொரோனா கோவிட் 19" இன் இக்காலப்பகுதியில் சமூகம்
எதிர்கொள்ளும் பிரச்சனைகளை
லாவகமாக வெளிப்படுத்துகிறார்.

*-நக்கீரன் மகள்-*

ISBN: 978-955-4041-22-6

9 789554 041226

Wanasinghe Printers, 496A, Trinco Road, Batticaloa. 065 2227170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org